இதழ்-75

01.09.2024

# தூமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

**ஆசிரியர்**
ச. சந்தோஷன்

**இணை ஆசிரியர்கள்**
ஐ.வி. மகரசேனன்
இ. வினோஜன்

**வடிவமைப்பாளர்**
ச. மதுஷா
வ. குணநீதன்


**திறனாய்வாளர்கள்**
கு. கீர்த்தனன்

**செய்தியியலாளர்**
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்தவை...

03 ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று
06 புதினம் கேட்டியளோ...
07 பொன் விழாக்காணும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
20 நாட்டில் மீண்டும் எலிக் காய்ச்சல்
21 வைத்திய நிபுணர் சரவணபவாவுக்கு யாழ் விருது
23 நல்லதை நினைத்தால் நல்லதே நடக்கும்
25 விழாக்கோலம் பூண்டுள்ள நல்லையம்பதி
26 மறக்கப்படுமா மன்னாரின் மட்பாண்ட கைத்தொழில்...?
31 சிறப்பாக நடைபெற்ற முத்தமிழ் முருகன் மாநாடு
32 யோகாசனம் எனும் அறிவியற்கலை
40 என் கால்கள் வழியே...

பவள மலராக 75 ஆவது இதழை வெளியிடும் இந்நேரத்தில் எம்மோடு இணைந்திருக்கும் வாசகர்களுக்கும், எம்மை நெறிப்படுத்தும் நல்லுள்ளங்களுக்கும் எல்லாம் வல்ல இறைக்கும் துமி குழுமத்தின் மனமார்ந்த நன்றிகள்








# ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று இல்லை



நோய் தீர்க்க வல்ல ஆடல்வல்லானை வைத்தியநாதன் என்று போற்றுகின்ற எமது பண்பாடு நோய் தீர்க்கும் மருத்துவர்களை வைத்தியர்கள் என்று அழைத்து இறைவனுக்கு ஒப்பானவர்கள் எனப் போற்றுகிறது என்றால் மருத்துவத்துறைக்கும் மருத்துவர்களுக்கும் எமது பண்பாட்டு கலாசாரத்தில் அன்று தொட்டு இன்றுவரை வழங்கப்படும் முக்கியத்துவம் உணர்கூடியதாக இருக்கும். இந்தப் போற்றுதல் வேறு எந்த மொழியிலும் இனத்திலும் காணுதல் அரிது.

மனிதர்களுக்கு தொல்லை அளிக்கும் மொத்த நோய்கள் 4448 என்று அகத்தியர் முதலான பதினெண் சித்தர்கள் கண்டறிந்தபடி சித்த மருத்துவத்தில் வகுக்கப்பட்டுள்ளது. இந்த பிணிகளைத் தீர்க்க திருவுளங்கொண்டு கயிலாயத்திலிருந்து இறைவி தைலப் பாத்திரமும், சஞ்சீவியும், வில்வமரத்தடி மண்ணும் ஏந்திவர உடன் இறைவன் தாமே மருந்தாகவும், மருத்துவராகவும் இந்தப் பூமிக்கு வந்ததாக சைவாகமங்கள் கூறுகின்றன. ஆக, ஆதியில் வைத்தியம் பார்த்தவர் வைத்திய நாதனான இறைவனே என்றும், அதன் தொடர்ச்சியாக வைத்தியம் பார்த்தவர்களை/ பார்க்கின்றவர்களை வைத்திய நாதனான சிவப் பரம்பொருளாகவே பார்க்கும் வழக்கம் எங்களுடையது. இதனால்த்தான் எந்த சபையிலும்.᎓. கூட்டத்திலும் சரி வைத்தியர்களுக்கு முன்னுரிமையும் உச்ச மரியாதையும் அளிக்கப்பட்டு வருகிறது.

ஆனால் சமீபகாலமாக மருத்துவத்துறையின் மகத்துவமும் புனிதத் தன்மையும் சற்றே அதன் உயர் நிலையில் இருந்து இறங்கி வரத் தொடங்கியிருக்கிறது. பணம் ஈட்டும் வழிகளை வியாபாரம் என்பார்கள். வருமானம் கருதாத தொண்டை சேவை என்பார்கள். மருத்துவ சேவையை மருத்துவ வியாபாரமாக சிலர் எண்ணி அதற்குள் ஊடுருவி அதன் பாதையை மாற்றத் தொடங்கிவிட்டார்கள். இதனால் பணம் கறக்கும் தனியார்

வைத்தியசாலைகள் மூலைக்கு மூலை உருவாக ஆரம்பித்து விட்டன. வியாதிகளை உருவாக்கி எதிர் தேசங்களை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வல்லரசுகள் மருத்துவ யுத்தம் செய்து கொண்டிருப்பதாக கூறுகிறார்கள். மருத்துவத்துறை வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அதி உச்ச தொழில்நுட்பங்களை பயன்படுத்தி நோய்களை கண்டறிந்து குணப்படுத்தும் சிகிச்சை முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு வருவது மறுப்பதற்கில்லை. ஆனால் அதற்கு நிகராக புதுப்புது நோய்களும் வளர்ந்து வருகின்றன.

ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் இல்லை. எனவே ஒரு சில மருத்துவ ஒழுக்கம் அற்ற மருத்துவர்களால் பல ஒழுக்கம் நிறைந்த அர்ப்பணிப்பு மிக்க மருத்துவர்களை நாம் உதாசீனம் செய்து விடக்கூடாது. உயரிய சேவை செய்யும் மருத்துவர்களை மனம் நொந்தால் அது மகாபாவம். எனவே, தவறு இழைப்பவர்களை வைத்து ஒட்டு மொத்த வைத்தியர்களையும் உதாசீனம் செய்ய கூடாது. அதற்கு மிகச்சிறப்பான உதாரணமாக யாழ் மாநகர சபை இவ்வருடம் செயற்பட்டிருக்கிறது. நல்லூர்க் கந்தன் பெருந் திருவிழாவை முன்னிட்டு யாழ்.மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழுவால் வருடந்தோறும் வெளியிடப்பட்டு வரும் நல்லைக்குமரன் மலரின் 32 ஆவது இதழ் வெளி யீட்டு விழாவும் யாழ் விருது வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது. இதன் போது வைத்திய நிபுணர் சரவணபவாவுக்கு யாழ். விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. எமது மக்களின் மகப்பேற்றுக்கு தன்னாலான மருத்துவ உதவிகளை வழங்கும் வைத்தியர் சரவணபவா அவர்களுக்கு இவ்விருது தாமதமாக கிடைத்திருப்பதாக பலர் கூறுகிறார்கள். ஆனால் வைத்தியத்துறையின் சேவைத் தன்மை கேள்விக் குறியாக உள்ள இத்தருணத்தில் உன்னத சேவையாளன் ஒருவருக்கு கிடைத்த யாழ் விருது எனும் அங்கீகாரம் உரிய காலத்தில் கிடைத்திருப்பதாகவே துமி கருதுகிறது. மருத்துவ சேவையை தன்னலமற்று புரியும் ஏனையவர்களுக்கு இது ஒரு முன்னுதாரணமாக இருக்கும்.

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் கற்று கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்குத் தெரிவாகி வைத்தியரான இவர் லண்டன் சேர்ஜேம்ஸ் பஜட் பல்கலைக்கழகத்தில் மகப்பேற்றுத் துறையில் நிபுணத்துவம் பெற்றார். கிளிநொச்சி வைத்தியசாலையில் பெண் நோயியல் விடுதியை ஆரம்பித்து பாமரப்பெண்களும் மருத்துவ சேவையைப் பெற்றுக் கொள்ள வித்திட்ட இவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் மகப்பேற்றுப் பெண் நோயியல் விடுதியை ஆரம்பித்துப் பல வருடங்கள் பெண் நோயியல் வைத்திய நிபுணராகச் சிறப்பாகச் சேவையாற்றினார். அதுமாத்திரமன்றி 2014 ஆம் ஆண்டு முதல் நெடுந்தீவு,

நயினாதீவு, புங்குடுதீவு போன்ற க்'டப் பிரதேசங்களில் அமைந்துள்ள வைத்திய சாலைகளிலும், 2018 ஆம் ஆண்டு முதல் காரைநகர், மண்டைதீவு, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேச வைத்திய சாலைகளிலும் மாதமொரு தடவை தனது வைத்திய சேவையை வழங்கி வருகின்றார். தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று பெண் நோயியல் வைத்திய நிபுணராக விளங்கி சீரிய சேவைகள் புரிந்து வருகிறார்.

குறித்த நிகழ்வில் வைத்திய நிபுணர் தனது வாழ்க்கைத் துணைவியுடன் இணைந்து உயிரிய விருதான யாழ் விருதைப் பெற்றுக் கொண்டார். இதேவேளை, யாழ். விருது 2006 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது வைத்தியர் சரவணபவா கூறுகையில், யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது மகப்பேற்று விடுதிகள் இல்லை. இது மிகவும் துன்பகரமான செய்தி. தற்போது காணப்படும் விடுதிகள் மகப்பேற்று விடுதிகளுக்கான போதிய வசதிகளுடன் கூடி ய விடுதிகளல்ல. கடந்த 2013ம் ஆண்டு போதனா வைத்தியசாலை மகப்பேற்று விடுதி இடிக்கப்பட்டது. பல முயற்சிகள் எடுத்த போதும் இன்றுவரை மகப்பேற்று விடுதி மீள கட்டப்படவில்லை. இந்த வருடத்தின் தொடக்கத்தில் சுகாதார அமைச்சர் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு வந்திருந்தபோது மகப் பேற்று விடுதியை மீள அமைத்துக் கொடுக்குமாறு கோரிக்கை விடுத்தேன். அதற்கான எந்தவொரு முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. யாழ். போதனா வைத்தியசாலையில் மகப்பேற்று விடுதி அமைக்கப்படாமை தமிழ் சமூகத்திற்கு ஆரோக்கியமான ஒன்றல்ல. எனவே உழைப்பவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு சிறு தொகை நிதி உதவியாவது வழங்கி மகப்பேற்று விடுதியை மீள கட்டியெழுப்புவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். எனவும் யாழ் போதனா வைத்தியசாலையில் புதிய மகப்பேற்று விடுதி அமைக்கப்படாவிட்டால் அடுத்த வருடம் ஜனவரி மாதம் உணவுத் தவிர்ப்பை மேற்கொண்டு உயிர் துறப்பேன் எனவும் என யாழ். போதனா வைத்தியசாலையின் பெண் நோயியல், மற்றும் மகப்பேற்று வைத்திய நிபுணர் ந.சரவணபவா கூறியுள்ளார்.

எனவே இவர் போன்ற பல அர்ப்பணிப்புள்ள மருத்துவர்களுக்கு மட்டும் சமூகம் உயர் கௌரவங்களை வழங்க வேண்டும். அப்போதுதான் அல்லாதவர்கள் திருந்துவார்கள். கொண்டாட வேண்டியவர்களை கொண்டாடும் அதே நேரம் கண்டிக்க வேண்டியவர்களை கண்டியுங்கள். அப்புறப்படுத்த வேண்டியவர்களை அப்புறப்படுத்துங்கள். ஏனென்றால் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று இல்லை.

# புதினம் கேட்டியளோ...!


போன கிழமை வத்தல் காயப் போடும் போது விரட்டி அடிச்சுப்போட்டு, புரட்டாதிச் சனி எண்டு போட்டு செல்லமா கூப்பிடுது அந்த கமலா....!
நாம யாருன்னு இண்டைக்கு காட்டுவம் அந்த பொம்பிளைக்கு.... போகாம இருப்பம்....!
கடவுளே.....! என்ன இண்டைக்கு ஒரு காகத்தையும் காணேல.....! கா... கா... கா...
31/08/24



# பொன் விழாக்காணும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஒரு சமுகத்தின் வளர்ச்சியையும் வீழ்ச்சியையும் அச்சமுகத்தின் கல்வி அடைவு மட்டங்களே நெறிப்படுத்துகின்றது. ஒரு சமுகத்தின் சிந்தனைகள், அதன் புலமையாளர்களால் வெளிக்கொணரப்படுகின்றன. “புலமையாளர்” எனும் பதம் அறிவு, காரணி மற்றும் விளக்க ஆற்றலுடையோரைக் குறிக்குமென பேராசிரியர் சிவத்தம்பி விளக்குகின்றார். இத்தகைய புலமைசார் பாரம்பரியத்தை ஈழத்தமிழ் சமுகத்தில் உருவாக்குவதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முதன்மையான நிலையை பெறுகின்றது. மேலும், ஈழத்தமிழ் சமுகத்தின் மகிழ்ச்சியை, கோபத்தை, வேட்கையை காலத்துக்கு ஏற்ப வெளிப்படுத்துவதில் ஈழத்தமிழர்களின் கண்ணாடியாக திகழ்ந்துள்ளது எனும் விதந்துரைப்பும் மறுக்கமுடியாததொரு பதிவாகவே அமைகின்றது. இத்தகைய சிறப்பை பெறும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2024-செப்ரெம்பரில் பொன் விழா சிறப்பை பெறுகின்றது. இத்தருணத்தில் அதன் வரலாற்று பரிமாணத்தை முதன்மைப் படுத்துவதும் தலைமுறைகளுக்கு எடுத்து சொல்வதும் அவசியமானதாக அமைகின்றது. ஆதலினால் தூமியின் பவள மலர் பொன் விழாக்காணும் யாழ் பல்கலைக்கழகத்தினை அட்டைப்படமாகக் கொண்டு வெளிவருகிறது.

ஈழத்தமிழர்களின் இருப்பை உறுதிப்படுத்துவதற்கு கல்வி சாலைகளின் அவசியம் உணரப்பட்டு, பல்கலைக்கழகம் உருவாக்குவதற்கான கோரிக்கை நீண்டகாலமாக கல்வியாளர்கள் மற்றும் ஈழத்தமிழரசியல் தரப்பினால்

முன்வைக்கப்பட்டது. ஈழத்தின் புகழாக அடையாளம் காணக்கூடிய சுவாமி விபுலானந்தரும் பல்கலைக் கழகத்துக்கான தேவைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். சனப் பெருக்கம் கூடியதும், மாணவர் எண்ணிக்கை அதிகரித்ததும், பாரம்பரிய கல்வி வளர்ச்சி அடைந்ததுமான இடமே பல்கலைக்கழகம் அமைவதற்கு பொருத்தப்பாடுடையதெனவும், யாழ்ப்பாணம் அத்தகைய பண்பை கொண்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக சுதந்திர இலங்கையில் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் என்பதும் கட்டமைக்கப்பட்டிருந்தது. இலங்கையின் முன்னோடிக் கல்வியாளரான வித்யாஜோதி ஆ.வி. மயில்வாகனம்(1906-1987) அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அறிவியற் பீடத்தின் தலைவராகப் பணியாற்றியவர். “இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு பல்கலைக்கழகம்” என்ற தலைப்பில் 1957இல் சிறு பிரசுரம் ஒன்றினையும் வெளியிட்டிருந்தார். அப்பிரசுரத்தில் தமிழ் பேசும் மக்களுக்கான பல்கலைக்கழக தேவைக்கான காரணங்களை பல கோணங்களில் விபரித்திருந்தார். ஒரு சமுகத்தில் பல்கலைக்கழகத்தின் வகிபாகம் குறித்து அவர் குறிப்பிட்டிருந்த காரணங்கள் முக்கியமாகின்றது.



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்கும் தமிழ் மாணவர்களின் வாழ்க்கை, தமக்குப் புறம்பான பண்பாட்டுச் சூழலில் ஏதோ வெறுக்கப்பட்டவர்கள் போல, அமைந்துள்ளது. இந்நிலை மாணவர்களுக்கு மட்டுமல்ல, ஆசிரிய வகுப்பையும் பாதித்துள்ளது. நமது சமுதாயத்தின் எதிர்காலத் தலைவர்களாக வரக்கூடிய இளஞ் சந்ததியினர் தமது கல்வியை ஐதீகத்திற்கும் பண்பாட்டிற்கும் ஏற்ற சூழலில் பெறுதல் மிக மிக அவசியம்.

அரசாங்கப் பதவிகளில் தமிழரின் திறமை பலியாகின்றது. இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் வாழ்க்கைப் போக்கைத் திருத்தியமைக்க உதவுவதுடன், அவர்களது உள்ளத்துக்குப் புத்துயிரூட்டும் ஆற்றல் வாய்ந்த நிலையமாக எமது தமிழ்ப் பல்கலைக்கழகம் அமையவேண்டும். வெகு காலமாக நம்மவர்கள் அரச உத்தியோகங்களை நம்பி வாழ்ந்துவிட்டனர். ஐரோப்பியரின் வருகைக்கு முன்னர் எம்மவர்கள் பல்வேறு துறைகளில் சிறப்புற்றிருந்தனர். ஆயர்வேத வைத்தியம், வங்கியமைப்பு, உழவுத்தொழில், வணிகம், கலைப்பணிகள், கப்பலோட்டத் தொழில், கடற் தொழில் முதலிய பல துறைகளில் வெற்றிகரமாக இயங்கினர். இன்று எமது ஆற்றலையும் புத்திக் கூர்மையையும்

திறமையையும் முற்றிலும் அரசாங்க சேவையில் செலவுசெய்கிறோம். இப்படுகுழியிலிருந்து எமது சமூகத்தை மீட்கத் தமிழ்ப் பல்கலைக்கழகம் உதவிசெய்ய வேண்டும்.

மனித குலத்தை உய்விக்கும் பல அரிய உளப்பண்புகளை எம் முன்னோர் வளர்த்து வந்தனர். பல நூற்றாண்டுகளாக எமது ஒழுக்கத்தை வகுத்துவந்த திருக்குறள், நாலடியார் முதலிய நூல்கள் அவ்வுண்மைகளைக் கொண்டுள்ளன. இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள் இவற்றையெல்லாம் கவனியாமல் வாழ்கின்றனர். இன்று எமது இளைஞர்களுக்குத் தேவையான பண்புகள் யாவை? நன்றும் தீதும் கண்டறியும் ஆற்றல், செயலாற்றவல்ல திடசித்தம், மலைபோல வரும் துன்பங்களைக் கண்டஞ்சாமை, ஒழுக்க உயர்வு முதலிய உயர்ந்த பண்புகளை நமது சமூகத்தில் வளர்த்தல் வேண்டும். எதிர்காலத்தில் இந்தப் பண்புகள் எமது இளைஞர்களுக்கு உறுதுணையாக நிற்கவல்லன. வள்ளுவர்



Lady Leelawathy Ramanathan


வாய்மொழிக்கேற்ப அமைந்த ஒரு பல்கலைக்கழகத்திலேயே இத்தகைய பண்புகளைப் பேணி வளர்த்தல் இயலும்.எனச்சுட்டிக்காட்டியிருந்தார். இவ்வாறு பல கோணங்களில் தமிழ் சமூகத்தின் இருப்பியலினை வலியுறுத்திய பல்கலைக்கழகத்தின் தேவை தமிழ் சமூகத்திடையே உணரப்பட்டது.

1958ஆம் ஆண்டு இலங்கையின் மகாதேசாபதி சேர் ஒலிவர் குணதிலக்கவினால் உருவாக்கப்பட்ட இலங்கை பல்கலைக்கழக ஆணைக்குழு (Ceylon University Commission) தனது அறிக்கையில், “யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகம் உருவாக்கப்பட வேண்டுமென்பதையும், அது விரைவில் சுயாதீன பல்கலைக்கழகமாக்கப்பட வேண்டுமென்பதும்” குறிப்பிட்டிருந்தது. இவ் ஆணைக்குழுவில் உயிர் வேதியியல் கல்வியாளர் மற்றும் கேம்பிரிட்ஜ், சீனா நிபுணர் கலாநிதி ஜோசப் நீதம், ராஜஸ்தான் யு.மு.யு ராஜ்புதானா துணைவேந்தர் பேராசிரியர் ஞானேஷ் சி. சட்டர்ஜி மற்றும் இலங்கை சிவில் சேவை அதிகாரி லியோபோல்ட் ஜேம்ஸ் டி சில்வா செனவிரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர். இவ்ஆணைக்குழு மற்றும் ஆணைக்குழுவின் அறிக்கை “நீதம் ஆணைக்குழு” (Needham Commission) மற்றும் “நீதம் அறிக்கை” (Needham Report) எனவும் அழைக்கப்படுவதுண்டு. யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகத்தின் தேவையை கலாநிதி ஜோசப் நீதம் மற்றும் பேராசிரியர்

ஞானேஷ் சி. சட்டர்ஜி ஆகியோரே வலியுறுத்தியிருந்தனர். 1959 ஜனவரியில் பூர்த்தி செய்யப்பட்ட அறிக்கை மூன்றாவது ஆணையாளரும் இலங்கையருமான செனவிரத்ன என்பவரால் இழுத்தடிப்பு செய்யப்பட்டது. அரசியல் குழப்பங்களால் நீதம் அறிக்கை 1959களில் முழுமையாக அமுல்படுத்த முடியவில்லை. எனினும் இன்றைய பல்கலைக்கழக கட்டமைப்பிற்கு நீதம் அறிக்கை வலுவான அடிப்படையை வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகம் சார்ந்த ஈழத்தமிழர்களின் நீண்டகால எதிர்பார்ப்பு 1974ஆம் ஆண்டிலேயே சாத்தியமாகியது. இதன் பிரகாரம் 1974ஆம் ஆண்டு ஜூலை மாதத்துக்கு முன்னரே யாழ்ப்பாணத்தில் இலங்கைப் பல்கலைக்கழக வளாகமொன்றை அமைப்பதற்கான திட்டமொன்று அமைச்சரவை மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 1974ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10ஆம் திகதி இலங்கைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகிய டு.ர்.சுமணதாச கொழும்பில் அவருடைய அதிகாரிகளுடன் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வளாகம் ஒன்றைத் திறந்து வைப்பது தொடர்பாக அடிப்படை தீர்மானங்கள் பற்றிக் கலந்தாலோசித்தார். ஜூலை-15அன்று கல்வி அமைச்சரும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் சார்பு வேந்தருமான டாக்டர் அல்.ஹாஜ்.பாடி-உ-த்-தின் மஹ்மூத் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது வளாகத்தை, சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களால் திருநெல்வேலியில் அமைக்கப்பட்டிருந்த பரமேஸ்வராக் கல்லூரி வளாகத்தை மையமாக கொண்டு நிறுவுவதற்கான பிரகடனத்தை வெளியிட்டார். ஜூலை-19அன்று வித்தியாலங்காரப் பல்கலைக்கழகத்தின் இந்துக் கற்கை தமிழ் ஆகிய துறைகளின் தலைவரான கலாநிதி க.கைலாசபதி அவர்களை யாழ்ப்பாண வளாகத்தின் முதல் தலைவராக நியமிக்கப்பட்டதை இலங்கை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் வெளிப்படுத்தினார்.

1972ஆம் ஆண்டின் இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டம் எண் 1இன் பிரிவு-85, பிரிவு-18இன் பிரகாரம் இலங்கை பல்கலைக்கழக துணைவேந்தருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில், கல்வி அமைச்சருடன் கலந்தாலோசித்து, ஜூலை-25அன்று 121/15ஆம் இலக்க வர்த்தமானியில், “ஆகஸ்ட்-01அன்று விஞ்ஞானம், சட்டம், மனிதநேயம்


Sir Pon Ramanathan

# இலங்கை பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாக தலைவர்கள்



பேராசிரியர் க.கைலாசபதி
(1974~1977)



கலாநிதி க.இந்திரபாலா
(1977)



பேராசிரியர் சு.வித்தியானந்தன்
(1977~1978)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர்கள்



பேராசிரியர்
சு.வித்தியானந்தன்
(1970~1988)



பேராசிரியர்
V.K.கணேசலிங்கம்
(1988) ~ பதில்



பேராசிரியர்
அ.துரைராஜா
(1988~1994)



பேராசிரியர்
K.குணரட்ணம்
(1994~1996)



பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை
(1996~2003)



பேராசிரியர்
S.மோகனதாஸ்
(2003~2006)



பேராசிரியர்
S.R.H.கூல்
(2006)



பேராசிரியர்
R..குமரவடிவேல்
(2006~2007) ~ பதில்



பேராசிரியர்
N.சண்முகலிங்கம்
(2007~2011)



சிரேஷ்ட பேராசிரியர்
வசந்தி அரசரட்ணம்
(2011~2017)



பேராசிரியர்
இரா. விக்னேஸ்வரன்
(2017~2019)



பேராசிரியர்
சி.சற்குணராஜா
(2020~தற்போது)

மற்றும் உடற்கல்வித் துறை ஆகிய பீடங்களுடன் யாழ்ப்பாண வளாகம் நிறுவப்படுவதற்கான அறிவிப்பு" வெளியிடப்பட்டது. எனினும் ஆகஸ்ட்-01அன்று விஞ்ஞானம் மற்றும் மனிதநேயம் ஆகிய இரு பீடங்களுடன் மாத்திரம் யாழ்ப்பாண வளாகம் நிறுவப்பட்டது. கலாநிதி க.கைலாசபதி அன்றைய தினமே உத்தியோகபூர்வமாக யாழ்ப்பாண வளாகத்தின் முதலாவது தலைவராக பொறுப்பேற்றார். யாழ்ப்பாண வளாகத்தின் முதலாவது பிரதிப்பதிவாளராக வித்யாலங்கார வளாகத்தின் பிரதிப் பதிவாளர் திரு. கே.பி.ஜி.விஜயசுரேந்திரா ஆகஸ்ட்-09அன்று கடமைகளைப் பொறுப்பேற்றார்.

ஆகஸ்ட்-13அன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரி மாணவ பிரிவு கல்வி அமைச்சினால் கையகப்படுத்தப்பட்டு யாழ்ப்பாண வளாகத்தின் விஞ்ஞானபீடம் நிறுவுவதற்காக ஒப்படைக்கப்பட்டது. யாழ்ப்பாணக் கல்லூரியின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலேயே கல்வியமைச்சினால் பட்டதாரி மாணவ பிரிவு கையகப்படுத்தப்பட்டிருந்தது. குறிப்பாக கிறிஸ்தவ மிஷனரியின் நெறியாள்கையில் இயங்கிய




யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரி மாணவர் பிரிவு விஞ்ஞான ஆய்வு கூடங்கள் மற்றும் விஞ்ஞான மாணவர்களுக்கான நூலக வசதிகளுக்கு பொருத்தமானதாக காணப்பட்டது. இப்பின்னணியில் ஆரம்ப யாழ்ப்பாண வளாகம் பரமேஸ்வராக் கல்லூரியுடன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வளவிலமைந்துள்ள பட்டதாரி மாணவப் பிரிவையும் இணைத்தாகவே காணப்பட்டது. எனினும் 1978ஆம் யாழ்ப்பாண வளாகத்தின் விஞ்ஞானபீடம் திருநெல்வேலி பரமேஸ்வரா கல்லூரி வளவிற்கு மாற்றப்பட்டது. யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரி மாணவ பிரிவு மீள யாழ்ப்பாணக் கல்லூரியிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்ப்பாண வளாகத்தின் முதல் போதனைசார் ஊழியர்களும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பணியாற்றிய ஆசிரியர்களிலிருந்தே தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். செப்டெம்பர்-01, 1974இல் முதல் போதனைசார் ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஒக்டோபர்-01, 1974இல் பேராதனை வளாகத்தின் கணிதப் பிரிவின் தலைவர் பேராசிரியர். பி.கனகசபாபதி யாழ்ப்பாண வளாக விஞ்ஞான பீடத்தின் முதலாவது பீடாதிபதியாகவும், பேராதனை வளாகத்தில் வரலாற்றுப்பாட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.இந்திரபால மனிதநேய பீடத்தின் முதல் பீடாதிபதியாகவும் நியமிக்கப் பட்டனர். போதனாசிரியர்கள் மற்றும் பீடாதிபதிகளின் நியமனங்களுடன்

யாழ்ப்பாண வளாகம் அறிவியல்ப் போதனைக்கான முழுமையான நிறுவன கட்டமைப்பிற்கான தயார் நிலையை பெற்றிருந்தது.

ஒக்டோபர்-06 1974அன்று, பிற்பகல் 2.25 மணியளவில், இலங்கையின் அப்போதைய பிரதமர் சிறிமாவோ ரத்வத்தே டயஸ் பண்டாரநாயக்க யாழ்ப்பாண வளாகத்தை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார். அரசியல் முரண்பாடுகளால் தமிழரசுக்கட்சி உறுப்பினர்களால் அன்றைய தினத்தை கறுப்பு தினமாக பிரகடனப்படுத்திய போதிலும், யாழ்ப்பாணத்திற்கான கல்வி ஒளிர்வீச்சு அன்றையதினம் இருளைபோக்க ஆயத்தமாகியது. கல்வி அமைச்சர் டாக்டர் அல்-ஹாஜ் பாடி-உத்-தின் மஹ்மூத் அவர்களின் அழைப்பின் பேரில் நினைவுப் பலகையை திறந்து வைக்கப்பட்டது. திருநெல்வேலி வளாகத்தில் இராமநாதன் கட்டடத்திற்கு அருகில் இன்றும் நினைவுக்கல் எழுச்சிபூர்வமாக உள்ளது.

சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்ட அன்று, யாழ்ப்பாண வளாகத்தின் முதல் 14 மாணவர்களுக்கான மாணவர் பதிவுப் புத்தகம் பிரதமர் அவர்களால் வழங்கப்பட்டது. முதல் தொகுதி மாணவர்களாக யாழ்ப்பாண வளாகத்தில் 208 மாணவர்கள் கல்வி கற்றிருந்தார்கள். ஆரம்பத்தில் விஞ்ஞான பீடம் கணிதம் மற்றும் புள்ளிவிபரவியல் ஆய்வுக்கற்கையையே வழங்கியது. மனிதநேய பீடமும் வரலாறு, தமிழ், இந்துநாகரீகம் மற்றும் சிங்களம் ஆகிய ஆய்வு கற்கைகளையே வழங்கியிருந்தது. 1975ஆம் ஆண்டில் மனிதநேய பீடம் கலைப்பீடமாக மாறியதுடன் பொருளாதாரம், புவியியல், சமஸ்கிருதம், தத்துவம் மற்றும் மொழி மற்றும் பண்பாட்டு ஆய்வுகள் உட்பட ஆய்வுக் கற்கைளின் எண்ணிக்கையை ஒன்பதாக உயர்த்தியது. 1998 வரையில் பொருளாதார கற்கைக்குள்ளேயே அரசறிவியல், சமுகவியல் மற்றும் வர்த்தக கற்கைகள் உள்ளடங்கியிருந்தது.

வளாகமாக இயங்கும் காலப்பகுதியிலேயே, மெல்ல மெல்ல யாழ்ப்பாண வளாகத்தில் ஆய்வு கற்கைகளும் விரிவடைந்தது. 1975/76 கல்வியாண்டில் 35 மாணவர்களுடன் இயற்பியல் மற்றும் உயிரியல் விஞ்ஞான பாடங்கள் தொடங்கப்பட்டது. டிசம்பர்-01, 1975இல் இராமநாதன் நுண்கலை கல்விக்கூடம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தால் கையகப்படுத்தப்பட்டது. இராமநாதன் நுண்கலை கல்விக்கூடம் தமிழ் பாரம்பரிய இசை மற்றும் பரத நாட்டியத்தின் கல்வியை மேம்படுத்துவதற்காக சேர்.பொன்.இராமநாதனின் மருமகன் செ.நடேசன் அவர்களினால் 1960ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிறுவனத்தில் இயக்குநர்களாகவும் விரிவுரையாளர்களாகவும் பணியாற்ற தமிழ்நாட்டிலிருந்து முன்னணி அறிஞர்கள் மற்றும் கலைஞர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

செ.நடேசனின் மறைவுக்குப் பிறகு, யாழ்ப்பாண வளாகத்தால் கையகப்படுத்தப்பட்ட இராமநாதன் நுண்கலை கல்விக்கூடம் ஆரம்பத்தில் நுண்கலைத்துறையின் ஒரு அலகாகவும், 1992 முதல் கலைப்பீடத்தின் ஒரு துறையாகவும் தரம்உயர்த்தப்பட்டு, ஆகஸ்ட்-16 2022அன்று 2293/22ஆம் இலக்கம் வர்த்தமானி அறிவிப்பினூடாக தனிப்பீடமாக மாற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண வளாக காலப் பகுதியிலேயே ஆகஸ்ட்-07, 1978இல் கைதடியில் உள்ள ஆயுர்வேத வைத்தியசாலையின் கட்டிடங்களில் மருத்துவபீடம் நிறுவப்பட்டது. பின்னர் 1981இல் தற்போதைய இடத்தில் (திருநெல்வேலியில்) புதிய கட்டிடத்திற்கு மருத்துவபீடம் மாற்றப்பட்டது. மாணவர்களின் ஆய்வுக்கற்கைக்காக 1978ஆம் ஆண்டிலேயே யாழ்ப்பாணம் பொது மருத்துவமனையும் போதனா வைத்தியசாலையாக உயர்த்தப்பட்டது.

கலைப்பீடம், விஞ்ஞானப்பீடம் மற்றும் மருத்துவ பீடங்களின் பொலிவோடு யாழ்ப்பாண வளாகம் நீதம் அறிக்கை எதிர்பார்த்தவாறே விரைவாக பல்கலைக்கழகமாகவும் உயர்ச்சியடைந்தது. 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு, டிசம்பர் 22, 1978 திகதியிட்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம், யாழ்ப்பாண வளாகம் 1979 ஜனவரி 01 முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் சுதந்திரமான மற்றும் தன்னாட்சிப் பல்கலைக்கழகமாக மாறியது. பேராசிரியர் க.கைலாசபதியை தொடர்ந்து ஆகஸ்ட்-01, 1977ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத்தின் இரண்டாவது தலைவராக பொறுப்பேற்றிருந்த பேராசிரியர் சு.வித்தியானந்தன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக பதவியேற்றிருந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பின்னாட்களில் பீடங்களாக உயர்வுபெற்ற சில ஆய்வுக்கற்கைகள், வேறு பீடங்களுக்குள் அலகுகளாக, கற்கையாக நீண்ட காலம் செயற்பட்டுள்ளன. முகாமைத்துவ ஆய்வுகள் மற்றும் வணிகத்திற்கான வரலாற்று வளர்ச்சி 1977இல் கலைப்பீடத்துக்குள் அறியப்படுகின்றது. வணிகவியல் இளங்கலை பட்டப்படிப்பு 1977இல் கலைப்பீடத்தில் பொருளாதாரத் துறையின் கீழே தொடங்கப்பட்டது. 1977ஆம் ஆண்டு நாட்டில் இடம்பெற்ற படுகொலைகள் காரணமாக ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழிமூல முகாமைத்துவ பட்டப்படிப்புக்கு உள்வாங்கப்பட்ட 14 இளங்கலை மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். இளங்கலை அறிவியல் முகாமைத்துவம் அல்லது வணிக நிர்வாகத்தில் பட்டம் வழங்குவது குறித்த ஆக்கபூர்வமான செனட் விவாதத்திற்குப் பிறகு, இறுதியாக

குறித்த பட்டதாரிகளுக்கு வணிக நிர்வாக இளங்கலை பட்டம் வழங்க முடிவு செய்யப்பட்டது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வணிகவியல் துறைக்கு ஜூலை-31, 1982அன்று ஒப்புதல் அளித்து, டிசம்பர்-18, 1983இல் செயல்படத் தொடங்கியது. முகாமைத்துவ பீட வளர்ச்சி 1999ஆம் ஆண்டிலேயே சாத்தியமாகியது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஐந்தாவது பீடமாக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடம் மே-29 1999 அன்று நிறுவப்பட்டது. இது இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழகங்களின் முகாமைத்துவ பீடங்களில் 6வது பீடமாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பிரசவிக்கப்பட்ட காலப்பகுதி இன மோதல்களின் ஆயுதப்பரிமாணத்தின் ஆரம்ப பொறிக்குள் காணப்பட்டது. அவை பல பாதகங்களை உருவாக்கிய போதிலும், சில சாதகமான விளைவுகளையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆய்வுத்துறை விஷ்தரிப்பில் ஏற்படுத்தியிருந்தது. 1983இல் இனக்கலவரங்களைத் தொடர்ந்து, கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட சுதேச மருத்துவ நிறுவகத்தின் சித்தா பிரிவு ஜூலை-02, 1984இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு மாற்றப்பட்டு கலைப்பீடத்தின் கீழ் ஒரு துறையாக மாற்றப்பட்டது.


தொடர்ந்து அக்டோபர்-01, 1993 முதல் துணைவேந்தரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் தனி அலகாக இயங்கியது. பின்னர், செப்டம்பர்-2003 முதல் பல்கலைக்கழக கவுன்சிலால் நியமிக்கப்பட்ட மேலாண்மைக் குழுவால் மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றது. தனிப்பீடத்துக்கான முயற்சிகளும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இனமோதல் ஏனைய பல்கலைக் கழகங்களுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழத்தை ஏறத்தாழ மூன்று தசாப்தங்கள் பின்னகர்த்தியுள்ளது என்ற பார்வை காணப்படுகின்றது. யுத்த வடுக்களுக்குள்ளேயே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது இயங்குநிலையை தக்க வைத்துள்ளது. பல்கலைக் கழகத்துக்கான முதன்மை நூலக கட்டிடம் மற்றும் மாணவர் மையத்தின் கட்டுமானம் எண்பதுகளின் தொடக்கத்தில் தொடங்கப்பட்டது. எனினும் இராணுவ நடவடிக்கைகள் மற்றும் 1987களில் அரசாங்கம் விதித்த பொருளாதாரத் தடையின் விளைவாக கட்டுமானப் பணிகள் முற்றிலுமாக நிறுத்தப்பட்டன. நூலகத் தொகுதியின் தரைத்தளத்தின் ஒரு பகுதி மட்டுமே 1986இல் முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு



வந்தது. 1987ஆம் ஆண்டு அக்டோபர்-நவம்பர் காலத்தில் இந்திய அமைதி காக்கும் படைகளின் இராணுவ நடவடிக்கைகளால் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகம் மற்றும் கல்வித் துறைகள் இரண்டின் செயல்பாடுகளும் முற்றிலுமாக சீர்குலைந்தன. இந்த நடவடிக்கைகளால் பல்கலைக்கழக கட்டிடங்கள் பெரும் சேதத்தை சந்தித்தன. இராணுவ நடவடிக்கைகளால் ஆய்வக உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் போன்றவற்றிற்கு கணிசமான சேதம் மற்றும் இழப்பு ஏற்பட்டது. இந்த இராணுவ நடவடிக்கைகளின் போது, ஒரு சில கல்வி மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் தங்கள் உயிரையும் இழந்தனர்.

பல்கலைக்கழகம், போர்வடுக்களின் தடைகளைத் தாங்கிக் கொண்டு, அதன் கல்விச் செயற்பாடுகளைத் தொடர்ந்தது, வளர்ச்சியில் ஓரளவு முன்னேற்றமும் கண்டுள்ளது. கிளிநொச்சியல் விவசாய பீடம் மற்றும் பொறியியல் பீடத்திற்கான முன்னாயர்த்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1981ஆம் ஆண்டு முதல் விவசாயப் பீடத்தை நிறுவுவதற்கு பல்கலைக்கழக மானியக் குழுவை வலியுறுத்தி வந்தது. ஆனால் 1985ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக் குழுவினால் அனுமதி வழங்கப்பட்டது. 1986இல் விவசாய பீடத்திற்கான கட்டிடங்கள் கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகத்தில் கட்டத் தொடங்கியது. இருப்பினும் துரதிருஷ்டவசமாக 1987இல் அது சீர்குலைந்தது, அதன்பின் உள்நாட்டுப் போரின் காரணமாக எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. டிசம்பர்-03, 1990இல் முறையான உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாமல், கிளிநொச்சியில் பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையம் மற்றும் விவசாயத் திணைக்களத்தின் மாவட்ட பயிற்சி நிலையத்திற்கு சொந்தமான பகிரப்பட்ட கட்டிடங்களில் நிறுவப்பட்டது. வேளாண்மைத் துறையின் சேவைப் பயிற்சி நிறுவனத்தின் கட்டிடங்களும் ஆய்வுத் திட்டத்தைத் தொடங்குவதற்கு அவற்றின் பௌதீக வளங்களைப் பகிர்ந்து கொண்டன. 1996ஆம் ஆண்டு வரை நான்கு தொகுதி மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். 1996ஆம் ஆண்டு கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் காரணமாக, வன்னியில் பல்வேறு இடங்களுக்கு இடம்பெயர வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிய விவசாய பீடம், இறுதியாக யாழ்ப்பாணத்திற்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்ய பல்கலைக்கழக பேரவை தீர்மானித்தது. 1997ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கல்வித்திட்டம் மீள ஆரம்பிக்கப்பட்டது. 2009ஆம் ஆண்டு ஆயுத போராட்ட மௌனிப்பிற்கு



பின்னர், 2013ஆம் ஆண்டு புதுப்பொலிவுடன் மறுசீரமைக்கப்பட்ட கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகத்திற்கு மீள விவசாயபீடம் இடமாற்றம் செய்யப்பட்டது.

பொறியியல் பீடத்தை ஸ்தாபிப்பதற்கான முதல் முன்மொழிவு 1979ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் செனட் சபையில் முன்வைக்கப்பட்டு, பல்கலைக்கழக செனட் மற்றும் பேரவை அங்கீகாரம் வழங்கியது. சாத்தியக்கூறுகளை ஆராய ஒரு குழு நியமிக்கப்பட்டது. இது 1980இல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு, “கிளிநொச்சியில் பொறியியல் பீடத்தை நிறுவி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைக்க பரிந்துரைத்து” ஒரு விரிவான அறிக்கையை சமர்ப்பித்தது. நீண்ட தாமதத்திற்கு பிறகு, 1991/92 கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கு 1988இல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. எனிலும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளால் கிளிநொச்சி போர்வலயமாக தனிமைப்பட்டதால், பொறியியல் பீடத்தின் ஆரம்பம் இடைநிறுத்தப்பட்டது. 2009ஆம் ஆண்டு ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டு, பிராந்தியம் இயல்பு நிலைக்கு மேம்பாடு அடைவதை வெளிப்படுத்தும் முனைப்பில் பல்கலைக்கழகத்தில் இடைநிறுத்தப்பட்ட கற்கைகளுக்கான மீளெழுச்சி முன்னுக்கு வந்தது. 2012ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2013ஆம் ஆண்டு அமைச்சரவை ஒப்புதலுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தின் முதல் தொகுதி மாணவர்கள் 2013ஆம் ஆண்டில் பதிவு செய்தார்கள். கிளிநொச்சி அறிவியல் வளாகத்தில் விவசாய பீடத்துடன் பொறியியல் பீடமும் சேர்ந்து கொண்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகம் விவசாய பீடம், பொறியியல் பீடத்துடன், தொழில்நுட்ப பீடத்தையும் தன்னுள் உள்வாங்கி கொண்டுள்ளது. தொழில்நுட்பம், அதன் இயல்பால், மிகவும் அதிநவீனமானது மற்றும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும், மனிதனின் அன்றாட வாழ்விலும் மகத்தான



செல்வாக்கைக் கொண்டுள்ளது. தொழிநுட்பக் கல்வியின் முக்கியத்துவத்தை கண்டறிந்த கல்வி அமைச்சு தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து 2013ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரத்திற்கு "தொழில்நுட்ப நெறியை" அறிமுகப்படுத்தியது. தொடர்ந்து, உயர்கல்வியை ஆரம்பிப்பதற்கான வழியை வழங்குவதற்காக, இலங்கைப் பல்கலைக்கழக அமைப்புகளில் புதிய இளங்கலை திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அரசாங்கத்தின் முன்முயற்சிக்கு இணங்க, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்வியின் முன்னோடியாக, தொழில்நுட்ப பீடத்தை நிறுவுவதற்கு ஒப்புக்கொண்டது. யாழ். பல்கலைக்கழகத்தில் தொழிநுட்ப பீடத்தை நிறுவுவதற்கான விண்ணப்பம், 2015 டிசம்பரில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டது. மார்ச்-29, 2016அன்று திகதியிடப்பட்ட 9/1960 இலக்க வர்த்தமானி அறிவித்தலூடாக உயர்கல்வி அமைச்சர்களின் ஸ்தாபன உத்தரவுக்கு இணங்க யாழ். பல்கலைக்கழகத்தின் 10வது பீடமாக 2016ஆம் ஆண்டு தொழில்நுட்ப பீடம் ஸ்தாபிக்கப்பட்டது. முதல் தொகுதி மாணவர்கள் 2015/2016 கல்வியாண்டில் தொழில்நுட்ப பீடத்தில் சேர்க்கப்பட்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உருவாக்கத்தில், அதுவோர் இந்து பல்கலைக்கழகமாக நிறுவுவதற்கான முனைப்புகள் மேகொள்ளப்பட்டது. எனினும் தமிழ்த்தேசியத்தின் மதச்சார்பற்ற அரசியல் கலாச்சாரம் இந்து பல்கலைக்கழக உருவாக்கத்தை நிராகரித்திருந்தது. எனினும் தமிழர் பண்பாட்டில் இந்து மத போர்வையில் சைவம் ஆழமாக வேரூன்றியதாகும். தமிழ் மீதான பண்பாட்டு ஆக்கிரமிப்பு என்பது சைவசமயத்தின் மீதே நிகழ்த்தப்படுகின்றது எனவே, ஈழத்தமிழர்களின் பண்பாட்டை பேண சைவ மதத்தை நெறிப்படுத்த வேண்டிய தேவை எழுகிறது. அதுசார் ஆய்வுப்பரப்புகளும் விரிவடைய வேண்டிய தேவை கல்வியாளர்கள் மற்றும் மதப்பெரியவர்களிடையே உருவாகியது. இதனை நிவர்த்தி செய்யும் முனைப்பில், மார்ச்-18, 2019அன்று திகதியிடப்பட்ட 5.ஃ.2115 இலக்க வர்த்தமானி அறிவித்தலூடாக யாழ்ப்பாணப் பல்கலைக்ககழத்தில் இந்துக் கற்கைகள் பீடம் நிறுவப்படுவதற்கான வழிகாட்டலை உயர்கல்வி அமைச்சு வழங்கியது. இதன் பிரகாரம், ஜூன்-6, 2019அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான பல்கலைக்கழக அணுகுமுறையின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கும் வகையில் இந்துக் கற்கைகள் பீடம் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை பல்கலைக்கழத்தின் வளகமாக ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இன்று தனக்குள் வளாகங்களை உள்ளடக்கியுள்ளதுடன், வளாகத்தினை சுயாதின பல்கலைக்கழகம் வரை தரமுயர்த்தியுள்ளது. வடக்கு

மாகாணத்தில் இரண்டாவது அரச பல்கலைக்கழகமாக 2021ஆம் ஆண்டு முதல் தரமுயர்த்தப்பட்டுள்ள வவுனியா பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகமாக 1997முதல் இயங்கி வந்துள்ளளது. வடமாகாண இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி 1991 இல் வவுனியாவில் ஸ்தாபிக்கப்பட்டது. அதுவே பின்னர், 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட உத்தரவின்படி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகமாக ஏப்ரல்-1997இல் பயன்பாட்டு அறிவியல் பீடம் மற்றும் வணிக ஆய்வுகள் பீடம் ஆகிய இரண்டு பீடங்களுடன் நிறுவப்பட்டது. 2020இல், 2160.ʹ.43 இலக்க 30.01.2020 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலூடாக தொழில்நுட்ப கற்கைகள் பீடம் நிறுவப்பட்டது. ஈழத்தமிழ்ப்பரப்பில் மேலுமொரு பல்கலைக்கழகத்தின் தேவை உணரப்பட்ட நிலையில், ஜூன்-08, 2021ஆம் அண்டு விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம், சுயாதீன அரச பல்கலைக்கழகமாக உயர்த்தப்பட்டு வவுனியா பல்கலைக்கழகம் என நிறுவப்பட்டது. வர்த்தமானி அறிவிப்பின்படி, ஆகஸ்ட்-1, 2021அன்று முதல் வவுனியா பல்கலைக்கழகம் 17வது அரச பல்கலைக்கழகமாக மாறியது. வவுனியா பல்கலைக்கழகம், மருத்துவ பீடம், சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ பீடம், சுகாதார விஞ்ஞான பீடம், மீன்வளர்ப்பு, மீன்பிடி மற்றும் கடல்சார் ஆய்வுகள், சுற்றுச்சூழல் அறிவியல் பீடம், கால்நடை பீடம், மனிதநேயம் மற்றும் சமூக அறிவியல் பீடம், மற்றும் பட்டதாரி ஆய்வுகள் பீடம்போன்ற உத்தேச பீடங்களை நிறுவுவதுடன் புதிய படிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க எதிர்பார்க்கிறது.

போர் ஈழத்தமிழர்களை மாத்திரமின்றி கல்விக்கூடங்களையும் இடம்பெயர செய்திருந்தது. 1995ஆம் ஆண்டு யாழ்ப்பாண நகரம் மற்றும் வலிகாமம் பகுதியில் இருந்து வடமராட்சி மற்றும் தென்மராட்சி பகுதிகளுக்கு குடாநாட்டிலும் பெருநிலப்பரப்பிலும் மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்தனர். வெளியேற்றத்தின் விளைவாக, பல்கலைக்கழக சுற்றுப்புறங்கள் மக்கள்தொகை இல்லாமல், அணுக முடியாததாக மாறியது. பல்கலைக்கழக நிர்வாகம் தற்காலிகமாக கிளிநொச்சியில் உள்ள விவசாய பீடத்திற்கு மாற்றப்பட்டது. சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நிர்வாகத்தின் உப அலுவலகம் நிறுவப்பட்டது. வெளியேற்றம் பல்கலைக்கழகத்திற்கு ஒரு



பேரழிவாக நிருபிக்கப்பட்டது. நூறு மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான பெறுமதியான ஆய்வுக்கூடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்களை இழந்தது. 1996ஆம் ஆண்டு ஜூலை மாதம் திருநெவேலி வளாகத்தில் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் தனது செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பித்தது.

2024ஆம் ஆண்டு பொன்விழா காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 350 கல்வி ஊழியர்களுடன், 10,500 இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களையும் 11 பீடங்களையும் ஆறு அலகுகளையும் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வெளியே கிளிநொச்சியில் ஒரு வளாகத்தையும் கொண்டு இயங்குகின்றது. போர் தின்ற வடுக்களிலிருந்து முழுமையான மீள்ச்சியை பெறமுடியாவிடினும், மெல்ல மெல்ல புதியதொரு எழுச்சியை நோக்கி பயணிக்கின்றமை மறுக்க இயலாத நிதர்சனமாகவே அமைகின்றது.

## நாட்டில் மீண்டும் எலிக்காய்ச்சல்



மழையுடனான கால நிலை மற்றும் வெள்ளப் பெருக்குக் காரணமாக வாந்தி, வயிற்றுப்போக்கு, காய்ச்சல், எலிக் காய்ச்சல் போன்ற நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் உரிய சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிப்பது அவசியமாகும் எனச் சுகாதாரப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் இலங்கையில் சுமார் 5,000 எலிக்காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் இரத்தினபுரி, காலி, கேகாலை, மாத்தறை, களுத்துறை, மொனராகலை மற்றும் குருநாகல் ஆகிய மாவ ட்டங்களில் அதிக ஆபத்து உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

தசை வலி, தலைவலி, காய்ச்சல் மற்றும் வாந்தி போன்ற அறிகுறிகள் இருந்தால், முறையான மருத்துவ ஆலோசனையைப் பெறுவது கட்டாயமாகும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# வைத்திய நிபுணர் சரவணபவாவுக்கு யாழ். விருது வழங்கி கௌரவிப்பு



நல்லூர்க் கந்தன் பெருந் திருவிழாவை முன்னிட்டு யாழ்.மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழுவால் வருடந்தோறும் வெளியிடப்பட்டு வரும் நல்லைக்குமரன் மல ரின் 32 ஆவது இதழ் வெளி மீட்டு விழாவும் யாழ் விருது வழங்கும் நிகழ்வும் நேவைத்திய நிபுணர் சரவணபவாவுக்கு யாழ். விருது வழங்கி கௌரவிப்பு

நல்லூர்க் கந்தன் பெருந் திருவிழாவை முன்னிட்டு யாழ்.மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழுவால் வரு டந்தோறும் வெளியிடப்பட்டு வரும் நல்லைக்குமரன் மலரின் 32 ஆவது இதழ் வெளியீட்டு விழாவும் யாழ் விருது வழங்கும் நிகழ்வும் 15.08.2024 காலை 9 மணியளவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் யாழ் மாநகரசபையின் ஆணையாளர் ந.கிருஷ்ணேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மகப்பேற்றுப் பெண் நோயியல் வைத்திய நிபுணர் ந.சரவணபவாவின் அர்ப்பணிப்பு மிக்க வைத்திய சேவைகளைப் பாராட்டி யாழ் மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழுவால்

உயர் விருதான யாழ்.விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். வைத்திய நிபுணர் தனது வாழ்க்கைத் துணைவியுடன் இணைந்து குறித்த விருதைப் பெற்றுக் கொண்டார். யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் கற்று கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்குத் தெரிவாகி வைத்தியரான இவர் லண்டன் சேர்ஜேம்ஸ் பஜட் பல்கலைக்கழகத்தில் மகப்பேற்றுத் துறையில் நிபுணத்துவம் பெற்றார். கிளிநொச்சி வைத்தியசாலையில் பெண் நோயியல் விடுதியை ஆரம்பித்து பாமரப்பெண்களும் மருத்துவ சேவையைப் பெற்றுக் கொள்ள வித்திட்ட இவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் மகப்பேற்றுப் பெண் நோயியல் விடுதியை ஆரம்பித்துப் பல வருடங்கள் பெண் நோயியல் வைத்திய நிபுணராகச் சிறப்பாகச் சேவையாற்றினார். அதுமாத்திரமன்றி 2014 ஆம் ஆண்டு முதல் நெடுந்தீவு, நயினாதீவு,




புங்குடுதீவு போன்ற கஷ்டப் பிரதேசங்களில் அமைந்துள்ள வைத்திய சாலைகளிலும், 2018 ஆம் ஆண்டு முதல் காரைநகர், மண்டைதீவு, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேச வைத்திய சாலைகளிலும் மாதமொரு தடவை தனது வைத்திய சேவையை வழங்கி வருகின்றார். தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று பெண் நோயியல் வைத்திய நிபுணராக விளங்கி சீரிய சேவைகள் புரிந்து வருகிறார். இதேவேளை, உயரிய விரு தான யாழ். விருது 2006 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகிறது.



# நல்லதை நினைத்தால் நல்லதே நடக்கும்



ஒரு நாள் அப்பா, இரண்டு கிண்ணங்களில் கஞ்சி சமைத்து சாப்பாட்டு மேசை மேல் வைத்தார். ஒரு கிண்ணத்தில் கஞ்சியின் மேலே ஒரு முட்டை. அடுத்த கிண்ணத்தின் கஞ்சியின் மேலே முட்டை இல்லை. அப்பா என்னிடம் கேட்டார். உனக்கு இந்த இரண்டில் எது வேண்டுமோ எடுத்துக் கொள். நான் முட்டை இருந்த கஞ்சிக் கிண்ணத்தை எடுத்துக் கொண்டேன். என்னுடைய புத்திசாலித் தனமான முடிவுக்காக என்னை நானே பாராட்டிக் கொண்டேன். அப்பா சாப்பிட ஆரம்பித்த போது எனக்கு ஆச்சரியம். அவருடைய கிண்ணத்தில் கஞ்சிக்கு அடியில் இரண்டு முட்டைகள். அவசரப்பட்டு நான் எடுத்த முடிவுக்காக வருத்தப் பட்டேன். அப்பா மென்மையாகச் சிரித்தபடி சொன்னார். ஒன்றை நினைவில் வைத்துக் கொள். உன் கண்கள் பார்ப்பது உண்மை இல்லாமல் போகலாம்.

அடுத்த நாளும் இரண்டு பெரிய கிண்ணங்களில் கஞ்சி சமைத்துச் சாப்பாட்டு மேசையில் வைத்தார். முதல் நாளைப் போலவே ஒரு கிண்ணத்தில் ஒரு முட்டை இருந்தது. இன்னும் ஒன்றில் இல்லை. அப்பா என்னிடம் கேட்டார். உனக்கு இந்த இரண்டில் எது வேண்டுமோ... நீயே எடுத்துக் கொள்..'

இந்த முறை நான் கொஞ்சம் புத்திசாலித் தனமாக யோசித்தேன். முட்டை வைக்கப் படாத கிண்ணத்தை எடுத்துக் கொண்டேன். அன்றைக்கும் எனக்கு ஆச்சரியம். கிண்ணத்துக்குள் அடி வரை துழாவிப் பார்த்தும் ஒரு முட்டை கூடக் கிடைக்கவில்லை. அன்றைக்கும் அப்பா சிரித்தபடி சொன்னார்.

ஹஎப்போதும் அனுபவங்களின் அடிப்படையில் எதையும் நம்பக் கூடாது. ஏன்

என்றால் சில நேரங்களில் வாழ்க்கை உன்னை ஏமாற்றக் கூடும். இதை ஒரு பாடமாக எடுத்துக் கொள்.

மூன்றாவது நாள். மறுபடியும் இரு கிண்ணங்களில் கஞ்சி சமைத்து மேஜையின் மேல் வைத்தார். வழக்கம் போல ஒரு கிண்ணத்தில் முட்டை... மற்றொன்றில் இல்லை.
அப்பா கேட்டார் ஹநீயே தேர்ந்து எடுத்துக் கொள்'. இந்த முறை அவசரப்பட்டு கிண்ணத்தை எடுக்காமல் பொறுமையாக அவரிடம் சொன்னேன்.
ஹஅப்பா நீங்கள் தான் இந்தக் குடும்பத்தின் தலைவர். நீங்கள் தான் நம் குடும்பத்துக்காக உழைக்கிறீர்கள். எனவே முதலில் நீங்கள் கிண்ணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். மற்றதை நான் எடுத்துக் கொள்கிறேன்' என்றேன்.
அவர் முட்டை இருந்த கஞ்சிக் கிண்ணத்தை எடுத்துக் கொண்டார். நான் முட்டை இல்லாத கஞ்சியைச் சாப்பிட ஆரம்பித்தேன்.
அன்றைக்கும் எனக்கு ஆச்சரியம். என் கிண்ணத்தின் அடியில் இரண்டு முட்டைகள் இருந்தன. அப்பா என்னைப் பார்த்துச் சொன்னார். நினைவில் வைத்துக் கொள். மற்றவர்களுக்கு நீ நல்லது நினைக்கும் போது எல்லாம் உனக்கும் நல்லதே நடக்கும்!

எப்பேர்ப்பட்ட தத்துவம் பார்த்தீர்களா...
அடுத்தவர்களுக்கு நல்லது நினையுங்கள். உங்களுக்கும் நல்லதே நடக்கும்.

## ஆபிரிக்கர்கள் என்கிற ஓட்ட ஜாம்பவான்கள்


ஒலிம்பிக் போட்டிகளில் சூப்பர் ஸ்டார் என்றால், அது ஆண்கள் 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெற்றி வாகை சூடுபவர் தான்.... நடைபெற்ற இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் நோவா லைல்ஸ் 9.79 வினாடிகளுள் ஓடி முதல் இடம் பிடித்து உள்ளார்...

இரண்டாவதாக வந்த ஜமைக்கா நாட்டின் தாம்சனும் அதே 9.79 வினாடிகளில் இலக்கை அடைந்து இருந்தாலும், அவருக்கும் நோவாவுக்கும் இடையில் 0.004 வினாடிகளே இடைவெளி....

போட்டியிட்ட அனைவருமே 10 வினாடிகளுக்குள் பந்தயத்தை முடிப்பது இதுவே முதல் முறை....

இறுதிப் போட்டியில் ஓடியவர்கள் வெவ்வேறு நாடுகளைச் சார்ந்தவர்களாக பெயர் அளவில் அழைக்கப் பட்டாலும்,... அவர்கள் அனைவருமே ஆப்பிரிக்கர்கள் அல்லது ஆப்பிரிக்க வழித் தோன்றல் என்பதே உண்மை....



















# விழாக் கோலம் பூண்டுள்ள நல்லையம்பதி








கனிஷ்ரா ஜெய காந்தன்
ஊடகக்கற்கைகள்துறை மாணவி
முருங்கன்

# மறக்கப்படுமா மன்னாரின் மட்பாண்ட கைத்தொழில்..?

மன்னார் மாவட்டத்தின் அடம்பன் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கறுக்காக்குளம் என்னும் கிராமத்தில் தமிழரின் பாரம்பரிய கைத்தொழிலாக விளங்குகின்ற மட்பாண்ட உற்பத்தி கைத்தொழிலினை இரண்டாம் தலைமுறையாக மேற்க் கொண்டுவருகின்ற வெள்ளைச்சாமி மகாலிங்கம் என்பவருடனான நேர்காணல்.

கேள்வி: உங்களுடை பெயர் , வயது மற்றும் குறித்த தொழிலை எத்தனை வருடங்களாக செய்துவருகின்றீர்கள்?

பதில்: எனது பெயர் வெள்ளைச்சாமி மகாலிங்கம், தற்போது எனக்கு 58 வயது, நான் கிட்டத்தட்ட 38 வருடங்களுக்கு மேலாக மண்பாண்ட உற்பத்தி கைத்தொழிலை மேற்க்கொண்டுவருகின்றேன்.

கேள்வி: நீங்கள் எவ்வாறான மட்பாண்ட பொருட்களை உற்பத்தி செய்கின்றீர்?

பதில்: அடுப்பு, சுட்டி, முட்டி, வீட்டிற்கு தேவையான சமையல் பாத்திரங்கள் மற்றும் பறவைகளுக்கான கூடுகள் போன்றவற்றை இங்கே உற்பத்தி செய்து வருகின்றேன்.

கேள்வி: எவ்வாறு இந்த கைத்தொழிலை பழக வேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு எவ்வாறு ஏற்ப்பட்டது?

பதில்: வீட்டில் எனது அப்பா சட்டி,

பானை வனைவதனை பார்க்கும் போது எனக்கும் அதில் ஈடுபாடு ஏற்பட்டது. இந்த ஆர்வம்தான் என்னை மட்பாண்ட கைத்தொழிலை பழக தூண்டியது.

கேள்வி: நீங்கள் எவ்வாறு மட்பாண்ட உற்பத்தி பொருட்களை செய்ய பழகினீர்கள்?

பதில்: ஆரம்பத்தில் அப்பாவிடம் இருந்து கற்றுக்கொண்டேன். பின்னர் எனது 20 வயதில் ஒட்டிசுட்டானின் போய் இங்கே இருந்து சில வருடங்கள் இக்கைத்தொழிலை கற்றுக்கொண்டேன். அதன் பின்பு என்னால் தனியாக மட்பாண்டங்களை உற்பத்தி செய்து கொள்ள என்னால் முடிந்தது.

கேள்வி: இந்த தொழிலை பழகுவதற்கு விசேட திறமைகள் ஏதும் தேவையென நீங்கள் கருதுகின்றீர்களா?

பதில்: நிச்சயமாக. விசேட திறமை என்று சொல்வதனை விட, இத்த தொழிலை



செய்வதற்கு மிக முக்கியமான விடயமாக பொறுமை வேண்டும். மண்ணை பதப்படுத்துவது, எமக்கு தேவையான பொருட்களை கற்பனையில் நினைத்து அவற்றை மட்பாண்டங்களாக வனைவது, சூளையிடுவது, அடுக்குவது விற்பனைக்காக காத்திருப்பது, இலாபத்திற்காக காத்திருத்தல் என எல்லாவற்றிக்கும் பொறுமை முக்கியமாக தேவைப்படுகின்றது.

கேள்வி: உங்களுடைய கைத்தொழிலுக்கு தேவையான மூலப்பொருளை எங்கிருந்து பெற்றுக்கொள்கின்றீர்கள்?

பதில்: மடுக்கரையில் இருந்து பெற்றுக்கொள்கின்றேன். வருடம் ஒன்றிற்கு 4 டிப்பர் மண் மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கு அனுமதி காணப்படுகின்றது.

கேள்வி: மன்னாரில் நீங்கள் மட்டுமா இந்த கைத்தொழில் ஈடுபட்டு வருகின்றீர்கள்?

பதில்: இல்லை. மன்னாரில் பலர் இவ்வுற்பத்தியில் ஈடுபட்டு வந்தார்கள். இருந்த போதிலும் மூலப்பொருள் பற்றாக்குறை மற்றும் பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களினால் மெல்ல மெல்ல குறைவடைந்து, தற்போது நானும் மடுக்கரையில் ஒருவரும் ஈடுபட்டுபட்டு வருகின்றோம். எங்களை விட யாரும் இக்கைத்தொழில் ஈடுபட்டு வருவதாக நான் அறியவில்லை.

கேள்வி: உங்களுடைய உற்பத்திப்பொருட்களை எங்கெல்லாம் விற்பனை செய்கின்றீர்கள்?

பதில்: மன்னார் , நொச்சியாகம , வவுனியா மற்றும் வருடத்தில் ஒன்றிரண்டு தடவைகளில் மட்டக்களப்பில் இருந்து வந்து மொத்தமாக மட்பாண்ட உற்பத்திப்பொருட்களை கொள்வனவு செய்து செல்வார்கள்.

கேள்வி: மழைக்காலங்களில் உங்களுடைய தொழில் எவ்வாறு முன்னெடுத்துச்செல்லப்படுகின்றது?

பதில்: மழைக்காலம் ஆரம்பிப்பதற்கு முதலே இரண்டு , மூன்று மாதங்களுக்கு தேவையான பொருட்களை உற்பத்தி செய்து காயவைத்து, சூளையிட்டு அடுக்கிவிடுவோம். மழைக்காலங்களில் நாங்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவோம். மீண்டும் கோடை காலம் ஆரம்பமாக மட்பாண்ட உற்பத்தியில் ஈடுபடுவோம்.

கேள்வி: மட்பாண்ட உற்பத்தியின் படிநிலைகளை பற்றி கூறமுடியுமா?

பதில்: ஆம். தேவையானளவு மண்ணை தெரிவு செய்து அதனை தொட்டித்தண்ணீர் கரைத்து, வடிகட்டி, அதிலுள்ள குப்பைகள், கற்களை அகற்றி களித்தன்மையில் சிறிய சிறிய கட்டிகளாக முதலில் சேகரித்துக்கொள்ள வேண்டும். பின்னர் சக்கரத்தில் வைத்து எமக்கு தேவையான அளவில், தேவையான பாத்திரங்களை வனைந்து அவற்றை மெதுவாகத்தட்டி, பலப்படுத்தி, வர்ணம்பூசி, காயவைத்துக்கொள்ள முடியும்.

அதன் பின்பு பாத்திரங்களை சூளையில் அடுக்கி தகுந்த விறகு மற்றும் வைக்கோல் கொண்டு மாறி மாறி சூளையிட வேண்டும். இவை அனைத்தையும் செய்த பின்னரே குறித்த மண்பாண்டங்களை விற்பனை செய்யலாம்.

இவற்றிற்கு எல்லாமே பொறுமையும் நிதானமும் அவசியம். கொஞ்சம் பொறுமை இழந்தால் கூடி பொருட்களில் ஓட்டை, நெளிவு, வடிவம் மாறுதல் மற்றும் உடைவு ஏற்படுவதற்கு நிறைய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

கேள்வி: சூளை கொட்டில் அமைத்தல் மற்றும் அது தொடர்பான செயற்பாடுகள் எவ்வாறு காணப்படுகின்றது?

பதில்: சூளை அமைத்து மண்பாண்டங்களை சுடுவது என்பது எமது தொழிலின் பிரதான விடயமாக காணப்படுகின்றது. இதற்கு துணையாக அமைக்கப்படுவதே சூளை கொட்டில் ஆகும். அந்த வகையில் ஒரு சூளை கொட்டில் அமைப்பதற்கு 150,000 ரூபாய்கள் வரை தேவைப்படுகின்றது. சூளை சுவர்கள் களி மண்ணாலும், கூரைகள் ஓடு மற்றும் தகரம் போன்றவற்றை கொண்டு அமைக்கப்படுகின்றது. இரண்டு வருடங்கள் மாத்திரம்தான் ஒரு சூளைக்கொட்டிலை பயன்படுத்த முடியும். பின்பு புதிய சூளை அமைக்கப்பட வேண்டிய கட்டாயம் காணப்படுகின்றது.

கேள்வி: எத்தனை மாத இடைவெளியில் சூளை இடுவீர்கள்?

பதில்: மாத இடைவெளிகள் இல்லை. குறைந்தது 400 தொடக்கம் 500 வரையிலான மட்பாண்டங்களை செய்த

புறகு அவற்றை ஒரே தடவையில் சூளையிடுவதை வழக்கமாக கொண்டுள்ளோம்.

கேள்வி: ஆரம்காலத்திற்கும், தற்காலத்திற்கும் இடையிலான மண்பாண்ட உற்பத்திபொருட்களின் நுகர்வு மக்கள் மத்தியல் எவ்வாறு காணப்படுகின்றது?

பதில்: ஆரம்ப காலங்களில் மக்கள் மத்தியில் மண்பாண்டங்களுக்கு நல்ல கேள்வி காணப்பட்டது, ஆனால் தற்போதைய சூழலில் மட்பாண்டங்களுக்கான கேள்வி குறைவடைந்து மக்கள் ஏனைய பிரதியீட்டு பொருட்களை கொள்வனவு செய்து பயன்படுத்துவதன் காரணமாக எமது உற்பத்தி வீழ்ச்சியடைந்துகொண்டே செல்கின்றது. மற்றும் தற்போது வீட்டுவியாபாரம் குறைவடைந்து மொத்த கேட்பவர்களுக்கு மாத்திரம்



பொருட்களை செய்து குடுக்கக்கூடிய நிலைமை காணப்படுகின்றது,

கேள்வி: இத்தொழிலின் ஊடாக கிடைக்கும் வருமானம் உங்களுடைய வாழ்வாதாரத்தினை கொண்டு நடாத்த போதுமானதாக உள்ளதா?

பதில்: பொருளாதார ரீதியாக பார்க்கின்ற போது தற்கால சூழலில் வருமானம் போதுமானதாக இல்லை. இருந்த போதிலும் எங்கள் குடும்பத்தினை இவ்வளவு காலமும் வாழ வைத்துக்கொண்டிருந்த இந்த தொழிலை நான் குறை சொல்ல விருப்பவில்லை.

கேள்வி: நீங்கள் இடம்பெயர்ந்து மீழ்குடியேற்றம் செய்யப்பட்ட புறகு இந்தொழிலை மேற்க்கொள்வதற்கு அரசாங்கத்தினால் உதவித்தொகைகள் அல்லது உதவித்திட்டங்கள் ஏதாவது கிடைப்பெற்றனவா?

பதில்: இதுவரை காலமும் அரசாங்கம் சார்பாக நிதியுதவிகளோ, பொருள்சார்திட்டங்களோ, சுயதொழில் முன்னேற்ற திட்டங்களோ எதும் எனக்கு கிடைக்கப்பெறவில்லை. ஆனால் ஐஆழு எனப்படும் நிறுவனம் மண்பாண்டம் செய்துகாய வைப்பதற்கு தேவையான குடிசையமைக்க உதவி செய்தது.

கேள்வி: உங்களுக்கு புறகு இந்த தொழிலை உங்களுடைய பிள்ளைகள் கற்றுக்கொண்டுள்ளார்களா?

பதில்: இல்லை.என்னுடைய மகன் இந்த தொழிலை கற்றுக்கொள்ள

விரும்பவில்லை. அதனால் நான் மகனை கட்டாயப்படுத்தவும் இல்லை. எனக்கு பிறகு இந்த தொழிலை செய்வதற்கு எங்கள் குடும்பத்தில் யாரும் இல்லாமல் போய்விட்டார்கள் என்ற வேதனை காணப்படுகின்றது. நான் எனது அப்பாவிடம் இருந்து தொழிலைக் கற்றுக் கொண்டேன் ஆனால், எனக்குப்புறகு எங்கள் தொழில் மறக்கப்பட்டு, அழிவடைந்து சென்றுவிடுமோ? என்ற மிகப்பெரிய கவலையுள்ளது.

கேள்வி: தனியார் நிறுவனங்கள், அமைப்புக்கள் முன்வந்து தற்கால இளைய தலைமுறையினரிடையே இக்கைத்தொழிலை பழக்க உங்களுக்கு அழைப்பு விடுத்தால் உங்கள் நிலைப்பாடு எவ்வாறாக அமையும்?

பதில்: ஆரம்பத்தில் என்னை இவ்வாறு கேட்டார்கள் அப்போது என்னுடைய குடும்பச்சூழல் பழக்குவதற்கு உகந்ததாக அமையாத காரணந்தால் நான் மறுத்துவிட்டேன். ஆனால் தற்போது அப்பிடியா எவராவது முன்வந்து கேட்பார்களேயானால் நிச்சயமாக நான் கற்ற தொழிலை அழிந்து விடாமல் காப்பாற்றுவதற்கு இளம் தலைமுறையினரிடையே மட்பாண்ட கைத்தொழிலின் மகத்துவத்தினை உணர்த்தி கற்றுக்கொடுப்பதற்கு நான் தயாராக உள்ளேன்.

# பிரம்மாண்ட அனுமன் சிலை

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் 90 அடி உயரத்தில் பிரம்மாண்ட அனுமன் சிலை திறக்கப்பட்டுள்ளது. டெக்சாஸின் புதிய அடையாளமாக மாறியுள்ள இந்தச் சிலை அமெரிக்காவின் 3-வது உயரமான சிலை என்ற அந்தஸ்தை பெற்றுள்ளது.



நியூயார்க்கின் 151 அடி உயரமுள்ள சுதந்திர தேவி சிலை அமெரிக்காவின் மிக உயரமான சிலையாகும்.. அடுத்ததாக ஃப்ளோரிடாவில் உள்ள 110 அடி உயரமான டிராகன் சிலை உள்ளது. இந்த பிரம்மாண்ட அனுமன் சிலைக்கு “ஒற்றுமையின் சிலை” ‘Statue of Union’ என்று பெயரிடப்பட்டுள்ளது. சுகர் லேண்ட் பகுதியில் உள்ள ஸ்ரீ அஷ்டலக்ஷ்மி கோயில் வளாகத்தில் இந்தப் பிரம்மாண்ட அனுமன் சிலை நிறுவப்பட்டுள்ளது.

# சிறப்பாக நடைபெற்ற முத்தமிழ் முருகன் மாநாடு

கலைநிகழ்ச்சிகளுடன் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு 24.08.2024 ஆரம்பமானது. இதில் உலகம் முழுவதும் இருந்து பக்தர்கள் பங்கேற்றுள்ளனர். ஈழத்தில் இருந்து சிறப்பு பேச்சாளராக கலாநிதி. செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

அரங்கங்களின் முன்பு “மலைபோன்ற செட்“ அமைக்கப்பட்டது. இந்த செட்டின் மேற்பகுதியில் முருகன், சிவன்-பார்வதி இருப்பது போன்ற நுழைவு வாயில் உள்ளது. இதன் அருகிலேயே, 100 அடி உயரத்தில் மாநாட்டு கொடி ஏற்றப்பட்டது.

மாநாட்டுக்காக 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அமரும் வகையில் பிரமாண்ட அரங்கம் அமைக்கப்பட்டது. மாநாட்டுக்கு வரும் பொதுமக்கள், பக்தர்கள் கண்டு களிக்கும் வகையில் முருகனின் சிறப்புகள் குறித்த கண்காட்சி அரங்கங்களும் அமைக்கப்பட்டு இருந்தன. மாநாட்டுக்கு வரும் பங்கேற்பாளர்கள், முக்கிய பிரமுகர்கள், பொதுமக்களுக்கு தனித்தனியாக அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

மாநாட்டுக்கு வரும் பக்தர்களுக்கு முருகனின் ராஜஅலங்கார படம், திருநீறு, குங்குமம், பஞ்சாமிர்தம், கந்தசஷ்டி புத்தகம், லட்டு, முறுக்கு உள்ளிட்டவை அடங்கிய பிரசாத பைகள் வழங்கப்பட்டன. இந்த மாநாட்டில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், வெளிமாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்தும் சுமார் 4 லட்சம் பேர் கலந்து கொண்டார்கள்.










# யோகாசனம் எனும் அறிவியற்கலை பற்றிய அறிமுகமும் உண்மைகளும்...

த. கீதாஞ்சனா
யாழ் பல்கலைக்கழகம்

யோகா (Yoga) என்பது இணைதல் அல்லது இணக்கமாக இருத்தல் என்ற பொருளுடைய வடமொழிச் சொல்லாகும். உடலையும் உள்ளத்தையும் இணைத்தல் முதற்படி, மனதையும் உயிரையும் இணைத்தல் இரண்டாம்படி, உயிரையும் பரம்பொருளையும் இணைத்தல் மூன்றாம்படி என்றவாறாக யோகம் உருவமைக்கப்படுகின்றது. இதனை அடைந்து கொள்ள மனதை ஒருமுகப்படுத்தல் முக்கியமானதாகும். இந்து மதத்தில் பிறப்பின் நோக்கம் பரம்பொருளுடன் இணைதலாகும். இயற்கையிலேயே மனிதனுக்கு இறைவனை நோக்கி உந்தும் மனோநிலை காணப்படுகின்றது. இவ் எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ள எங்களுடைய யோகிகளும், ஞானிகளும் முறைப்படுத்தி கட்டமைத்திருக்கும் ஒரு அறிவியல் அணுகுமுறையே யோகமாகும்.

குழந்தைகள் முதற்கொண்டு இல்லறத்தில் வாழும் மனிதர்கள், முதியவர்கள் உட்பட அனைவருக்கும் யோகம் அவசியம். எல்லா வகையான இன்பங்களை வாழ்க்கையில் துய்க்க யோகப்பயிற்சி உதவுகிறது. உடலும் உள்ளமும் இணைவதன் மூலமே வாழ்க்கையில் இன்பம் கிட்டுகின்றது. இதனை பதஞ்சலி முனிவர் "யோகா சித்த விருத்தி நிரோதா " எனும் ஸ்லோகத்தில் மனதின் எண்ண அலைகளை கட்டுப்படுத்துவது யோகம் என குறிப்பிடுகிறார்.

உண்மையில் உடலுக்கானதும், உயிருக்கானதுமான நலம் பயக்கும் ஓர் நெறியே யோகாவாகும். உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனும் ஆரோக்கியமாகவும், அமைதியாகவும், பலவீனர்களாக இல்லாமலும் வாழ விரும்புகின்றனர். உடலையும் மனதையும் நோயின்றிக் காப்பதற்கான உபாயமாக யோகப் பயிற்சிகள் உள்ளன. யோகமானது

தத்துவத் தளத்தின் ஊடாக முகிழ்ப்பெய்தி இருப்பினும் இன்று கலைமரபாக வாழ்வியல் நெறியாக வளர்ந்து வந்துள்ளது. இதனாலேயே யோக மகரிஷி கோபாலானந்தர் ”முறையான பயிற்சி, முறையான உணவு, முறையான உடலைத் தளர்த்துதல், நல்ல சிந்தனையும் தியானமும், முறையான மூச்சுப் பயிற்சி என்பன உள்ளடங்கியதே யோகா” என்கிறார். யோகவானது மக்களின் உடல், உள்ளத்தை அடக்கியாளக்கூடிய அறிவியற்கலை என்பதனால் அதனை சாகாக்கலை என்பர்.

தற்காலத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சாதனங்களின் அதிகரித்த வளர்ச்சி, மனித இனத்தை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்வதோடு அதற்குச் சமாந்தரமாக வாழ்வின் இருப்பிற்கு அச்சுறுத்தலாகவும் அமைகின்றன. நிலையான அபிவிருத்தி என்ற கருத்தியலுடன் பல கைங்கரியங்கள் பொதுநல மற்றும் சுயநல நலன்களின் அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டாலும் விழுமியங்களற்ற, முரண்பாட்டுப் போட்டி போன்றவை இயல்பாகியுள்ள சமூகத்தில் நிலைபேண் அபிவிருத்தி எத்தகையளவு பொருத்தப்பாடு உடையதாக அமையும் எனும் கேள்வி உதயமாகியுள்ளது.

யோகாசனம் இத்தடைகளை உடைக்கக் கூடிய பெறுமானத்தினைப் பெறுகின்றது. இந்தியாவை மையப்படுத்தி உலகளாவிய ரீதியில் பரவலடைந்துள்ள ஓர் அறிவியல் நெறியாகக் காணப்படுகின்றது. இந்தியாவில் புராதன காலத்தில் குருகுல முறையில் கற்பிக்கப்பட்டு வந்த யோகா மனதினைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி,உடல்,செயல், மன உணர்ச்சிகளின் கட்டுப்பாடு மற்றும் இயற்கைக்கும் மனிதனுக்குமான ஒத்திசைவு முதலியனவும் இணைந்த ஒரு உருவாக்கமாக உள்ளது. இதனை மன விஞ்ஞானம் (science of mind ) எனவும் சுட்டிக்கூறுவர். உலகளாவிய ரீதியில் யோகாவின் கேள்வி உணரப்பட்டதன் காரணமாகவே யோகா தினமும் விமர்சையாக நாடுகளிடையே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இயந்திரமயமாக்கல் உலகத்தில் உடலுழைப்பு குறைவடைந்துள்ளதோடு பல்வேறு நோய்கள்இ பொருளாதார நெருக்கடிஇ அவசரப்பதற்றம் மற்றும் மன அழுத்தம் எனும் நிலையில் மனிதர்கள் நெருடலுக்கு உள்ளாவாதாலும் இதற்கு சிறந்த தீர்வாக யோகத்தை அடையாளப்படுத்தி காட்ட முடிகிறது.



யோகத் தத்துவத்தில் மந்திரஜோகம் ,இலயயோகம், கடயோகம், ராஜயோகம் என்பன குறிப்பிடப்படுகிறது. இவற்றில் இராஜயோகம் யோக சூத்திரத்தில் விரிவாகப்பட்டுள்ளன. இராஜயோகம் மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினிச் சக்தியை படிமுறையின் ஆறு ஆதாரங்களின் ஊடாக சித்தத்தின் உச்சியில் இருக்கும் சிவத்தோடு இணைப்பது என்பர். நம்பிக்கை மருத்துவம் என சுட்டப்படுவதும், நரம்பு, மனம் முதலியவற்றால் பாதிப்புற்றவர்களுக்கு மந்திர சிகிச்சை அளிப்பதுவுமே மந்திரயோகத்தில் உள்ளடங்கும். உடலியல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் அப்பியாச முறைமையே கடயோகமாகும். என்றவாறாக யோக தத்துவ வகைப்பாடு காட்டப்படுகிறது.

யோகமானது அட்டாங்கம் எனும் எட்டு உறுப்புக்களை உள்ளடக்கியதாக விளங்குகின்றது. இதனால் அட்டாங்கு யோகம் என்பர். இவை இயமும், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாகும். இவற்றினைப் பற்றிய தெளிவை திருமூலர் மூன்றாம் தந்திரத்தில் தெளிவுற விளக்கியுள்ளார்.

"இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணயாமம் பிரத்யாகாரஞ்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
அயமுறும் அட்டாங்குமாவது மாமே"

எனும் திருமந்திர பாடலில் கண்டு கொள்ள முடிகிறது. இதனில் முதல் உறுப்பு இயமம் ஆகும். இயமம் என்பது தீயவற்றை செய்யாமல் விடுதல் ஆகும். இது யோக வழியின் முதல் நிலை. இயமத்தை மேற்கொள்பவர் உயிர்களைக் கொல்லார், பொய் உரைக்கார், திருடார், பிறரை மதித்து நடப்பார், அடக்கமுடையவராகவும், நடுநிலைமையில் நிர்க்க வல்லவர், பகிர்ந்து கொள்ளும் பண்பு கொண்டு, குற்றம்,கள், காமம் தவிர்த்து வாழ்வார்கள். என்பதை திருமந்திரம் "கொல்லான் பொய் கூறான் களவிலான் எண்குணம்....." எனும் பாடலில் விளக்கி நிற்க்கின்றது.

"தூய்மை அருளூண் சுருக்கம் பொறை செவ்வை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை
காமங் களவு கொலையெனக் காண்பவை
நேமியீ ரைந்து நியமத்த னாமே......"

எனும் பாடலில் தூய்மை, கருணை, சுருங்கிய உணவு, பொறுமை, நேர்மை, உண்மை, உறுதியுடைமை ஆகியவற்றை கடைப்பிடிப்போம். காமம், களவு, கொலை ஆகியவற்றை விலக்குவோம் இவை அனைத்தும் நியமத்து இருப்பவர்கள் மேற்கொள்ள வேண்டிய விஷ



யங்களாகும். என்கின்றார் திருமூலர். அதாவது ஜோகிகள் கடைபிடிக்க வேண்டிய நியமங்களை விளக்கி காட்டியுள்ளார்.ஆசனம் என்பதை திருமந்திரம் ஆதனம் என சுட்டுகின்றது. ஆசனம் என்பது இருக்கை முறையாகும். இதனாலேயே ”இருக்க இருக்க இருக்கை தெளியும்” என குறிப்பிடப்படுகிறது. 126க்கும் மேற்பட்ட ஆசனங்கள் காணப்படுவதாக யோக வாழ்வு இதழ்(ஆத்மா-1 வாழ்வு -4) குறிப்பிடுகின்றது. பிராணயாமம் என்பது மூச்சு பயிற்சியாகும். இது பிராணனை(உயிர் வாயு) பற்றிய அறிவு மற்றும் அதை நமது வயப்படி அடக்குதல் என்று பொருள்படும். இதனையே திருமந்திரம் 569வது பாடலானது

“வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்
பளிக்கொத்துக்காயம் பழுக்கினும் பிஞ்சாம்
தெளியக்குருவின் திருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு வளியனும் மாமே”

எனக் குறிப்பிடுகின்றது.



பிரத்தியாகாரம் என்பது மனத்தை உள்நோக்கித் திருப்பும் பயிற்சியாகும். இதனை திருமூலர்

“கண்டு கண்டுள்ளே கருத்துற வாங்கிடிற்
கொண்டு கொண்டுள்ளே குணம்பல காணலாம்”

“பண்டுகந் தெங்கும் பழுமுறை தேடியை
இன்று கண்டிங்கே இருக்கலு மாமே”

எனும் பாடலில் மனத்தை வெளியே செல்ல விடாமல் தடுத்து உள்நோக்கி பார்த்தால் உள்ளே நமது இயல்பான ஒளி மிகுந்த குணங்களைக் காணலாம். பழங்காலத்திலிருந்து எங்கெங்கோ விரும்பித் தேடப்படும் பரம்பொருளை நாம் இன்றே இங்கே நமக்குள்ளே காணலாம் என்கிறார். தாரணை என்பது உந்தி, இதயம், உச்சி எனும் மூவிடத்தில் மனதை நிலை நிறுத்தலாகும். கட்டுப்படுத்தப்பட்டு எங்கும் மனதை அலைபாயாது அசைவற்றிருக்கும் சித்தம் எனவும் குறிப்பிடப்படுகிறது. 12 வினாடிகள் சித்தம் செய்யப்படாமல் இருந்தால் ஒரு தாரணை எனப்படும். 12 தாரணிகள் சேர்ந்ததே தியானம் ஆகும். இதனை திருமந்திரத்தில்

“அரித்தவுடலை ஐம்பூதத்தில் வைத்து
பொருத்தஜம் பூதம் சத்தாதியிற் போந்து
தெரித்த மனாதி சித்தாதியிற் செல்ல
தரித்தது தாரனை தற்பரத்தோடே”

என்னும் பாடலில் ஆன்மா சிவத்துடன் பொருந்தி இருப்பதே தாரணை என்கிறார்.தியானம் என்பது உணர்வற்று, உடலற்று, சிந்தனையற்று, நினைவற்று, பாசமற்று, பார்ப்பது பார்க்காததுமாகி இரண்டும் அற்று பிரம்மத்திடம் மனமும் புத்தியும் லயித்திருப்பது இருப்பதே. அதாவது இடையறாத சிவ சிந்தனையுடன் இருத்தல் தியானம் எனப்படும்.ஆன்மா இறைவனுடன் ஒன்றுதலே சமாதியாகும். இதுவே இறுதி படி நிலை ஆகும். இதனை

"சமாதிய மாதியில் தான் செல்லக் கேட்கின்
சமாதிய மாதியில் தாம் எட்டு சித்திக்கும்
சமாதியமாதியில் தங்கினோர்க்கு அன்றே
சமாதிய மாதி தலைப்படும் தானே "

எனும் பாடலில் திருமூலர் அட்டக யோகத்தில் குறிப்பிட்ட படிமுறைகளை தவறாது கடைப்பிடித்தால் அடையும் நிலை என்கின்றார். இவ்வாறாக எட்டு படிமுறைகளும் ஆரோக்கியமான யோகத்திற்கு முக்கியமானவை ஆகும்.

யோகத்தின் பலனை படிப்படியாக அடையும் முறைகளை காலாதிகாலமாக எம் முன்னோர்கள் எடுத்துக் கூறி வந்தமையினை காண முடிகின்றது. மேல் குறிப்பிட்ட அட்டாங்கு யோக முறையிலாக திருமூலர் தெளிவுற விளக்கி உள்ளதோடு வள்ளலார் ராமலிங்கம் "ஜோதிமயமாக எங்கும் நிறைந்த இறைவன் நமது உடலின் உள்ளேயும் ஜோதிமயமாக தலை நடுவில் சிற்றம்பலத்தில் இருக்கும் அருட்பெருஞ்ஜோதியை வழிபடுவதின் மூலமாகத்தான் இறை அனுபவம் பெற முடியும்" என்கிறார். அதாவது உடல், மூளை, மனம் மூன்றையும் ஒருங்கிணைத்தலே யோகமாகும் என்கிறார். சமஸ்கிருதத்தில் உள்ள பதஞ்சலி முனிவரின் "யோகா அபிராசம்" என்னும் நூலிலும் "ஆசனம், பிராணயாமம், தியானம் செய்வதன் மூலம் ஆரோக்கிய வாழ்க்கையை பெறலாம்" எனும் கருத்து நிலவுவதாக குறிப்பிடப்படுகிறது. மேலும் பகவத் கீதையில் கிருஷ்ணன் யோகத்தை பற்றி அர்ஜீணனுக்கு கூறும் போது

"அளவு கடந்து உண்பவனுக்கும், அறவே உண்ணாதவனுக்கு, மிகைப்பட உறங்குபவனுக்கு, மிகைப்பட விழித்திருப்பவனுக்கும் யோகம் இல்லை" என்கின்றார்.

"புத்தியிலே சார்பு எய்தியவன் இங்கு நற்செய்கை, தீய்செய்கை இரண்டையும் துறந்து விடுகிறான். ஆதலால் யோக நெறியிலே பொருந்துக. யோக செயல்களிலே திறமையாகு"



என கீதையில் (அத்த 2.50 ) யோகம் கர்மங்களில் வல்லமை உடையது ஆகையால் யோகங்களில் நின்று தொழில்களை செய் என்கிறார் கிருஷ்ணப் பரமாத்மா என்றவாறாக நேர்த்தியான நூல்களின் யோகப் பார்வை காட்டப்படுகிறது.

யோகப் பயிற்சி தேகப்பயிற்சி (உடற்ப்பயிற்சி) என்பவற்றில் மக்களிடையே ஒருமித்த கருத்து காணப்படுகின்றது. இது உண்மையில் தவறான ஒன்றாகும். யோகப் பயிற்சிக்கு போக பயிற்சிக்கு வேறுபாடுகள் அதிகளவாக காணப்படுகின்றன. அதாவது இரண்டையும் ஒருவர் செய்யக்கூடாது மூளையை உபயோகித்து வேலை செய்பவர்களுக்கு யோகாசனம் சிறந்த வரப்பிரசாதம். ”தேகப்பயிற்சியாளர்களுக்கு நோய் வரும் யோகப் பயிற்சியாளர்களுக்கு நோய் வராது” என்கிறார் ஆண்டியப்பன்.

தேகப்பயிற்சிக்கு அதிக அளவு உணவு தேவை யோகப் பயிற்சிக்கு குறைந்த அளவு உணவு எடுத்து கொள்ளல் போதுமானது. யோகப் பயிற்சி மூலம் தவறான பழக்கவழக்கங்களை நீக்க முடியும் தேகப்பயிற்சியில் சாத்தியமற்றதாகும். தேகப் பயிற்சி கோப குணத்தையும், மூக்க குணத்தையும் ஏற்படுத்தும் யோகப் பயிற்சி சாந்த குணத்தை ஏற்படுத்தும். யோகப் பயிற்சியால் உடலில் நோய் தடுப்பு சக்தி அதிகமாகும் .தேகப் பயிற்சிக்கு நோய் தடுக்கும் சக்தி கிடையாது, தேகப் பயிற்சி மணிக்கணக்காக செய்ய வேண்டும். யோகப் பயிற்சி 15 நிமிடம் செய்தால் போதுமானது. எந்த வயதிலும் யோகப் பயிற்சி செய்யலாம் தேகப்பயிற்சி ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேல் செய்ய முடியாது., தேகப் பயிற்சிக்கு கருவிகள் இடம் வேண்டும். யோகப் பயிற்சிக்கு இவை தேவை இல்லை. தேகப் பயிற்சியில் சக்தி விரயம். யோகப் பயிற்சியில் சக்தி கூடும்.,



யோகப் பயிற்சியில் வெளித்தசை, உள்ளுறுப்புகள் பலப்படுத்தப்படும் தேகப்பயிற்சி வெளி தசைகளுக்கு மட்டும் உகந்தது. தேகப் பயிற்சியால் களைப்பு ஏற்படும் யோகப் பயிற்சியினால் உற்சாகம் ஏற்படும். என்றவாறாக வேறுபாடுகளை குறிப்பிட்டலாம்.

யோகாசனமானது பூரண அறிவு விளக்கங்கள் கொண்டு செய்யப்பட வேண்டும். அதனை சிறந்த குருவிடம் முறைப்படி கற்றுக்கொள்ள வேண்டும். யோகம் செய்பவன் குரு சொற்படி ஒழுக்கமானவனாக, சீராக பாடங்களைப் பயிற்சி செய்பவனாக இருக்க வேண்டும். அப்போதுதான் யோகத்தில் முன்னேற்றம் அடைய முடியும். ஜோகாவானது உடல், உள, ஆன்மிக ரீதியிலும் பல்வேறு நன்மைகளை அடைவதற்கு உதவுகின்றது. அதாவது ஆயுளை அதிகரிக்க செய்கிறது, ஞாபக சக்தியை அதிகரிக்கிறது, நோயற்ற வாழ்விற்கு வழி கூறுகிறது, உடலை அழகாக வனப்புரச் செய்கிறது, பிணிகள் எதையும் குணப்படுத்துகிறது, ஆண்மையை அதிகரிக்கச் செய்கிறது, மனதை நல்வழியில் செலுத்துகிறது, சோர்வையும், சோம்பலையும் ஒழிக்கிறது, மனதிற்கு சாந்தியை கொடுக்கிறது, இளமையுடன் பொலிவுடன் ஆரோக்கியமாக வாழ உதவுகிறது, தன்னம்பிக்கையை வளர்க்கிறது, உடலில் சீரான இரத்த ஓட்டம் உடல் உறுப்பு செயற்பாடுகளுக்கு உதவுகின்றது.

எனவே யோகம் பற்றிய தெளிவூட்டல்களும் விழிப்புணர்வும் எங்களிடத்தே அவசியமாகின்றது. மேற்குலக மருத்துவச் சந்தையால் ஏற்படும் விபரீதங்களை தடுப்பதற்கு எம் பண்பாட்டு வெளிப்பாடாக உருவெடுத்துள்ள யோகாசனம் பற்றிய கருத்துருவாக்கத்தை மக்களிடம் சென்றடையச் செய்யவேண்டிய பொறுப்பானது எங்கள் தேசத்தில் வாழும் சமுதாயப்படுத்தல் சக்திகளிடம் உள்ளதென்பது உணரப்பட வேண்டும் அவ் வகிபங்கினை உணர்ந்தே யோகாசனம் பற்றிய இக் கருத்துப்பதிவினை வரைந்துள்ளேன். தோடர்ந்தும் இவ் வகையான கோட்பாட்டுக்கருத்தியல் மூலமும் நடைமுறை விளக்கங்கள் மூலமும் உங்களோடு கருத்துப் பரிமாற்றத்தை மேற்கொள்வேன்.



# நல்லைக் குமரன் மலரின் 32 ஆவது இதழ் வெளியிட்டு வைப்பு

நல்லூர் கந்தன் பெருந் திருவிழாவை முன்னிட்டு யாழ்.மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழுவால் வருடந்தோறும் வெளியிடப்பட்டு வரும் நல்லைக் குமரன் மலரின் 32 ஆவது இதழ் வெளியீட்டு விழா 15.08.2024 வியாழக்கிழமை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர்.சி.சிறிசற்குண ராஜா பிரதம விருந்தினராகவும், யாழ்.மாவட்ட ஓய்வுநிலை அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். யாழ். மாநகர சபையின் ஆணையாளர் ந. கிருஷ்ணேந்திரன் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் சிறிசற்குணராஜா ஆகியோர் இணைந்து நல்லைக் குமரன் மலரை வெளியிட்டு வைக்க தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய நிர்வாகம் சார்பாக இ. இராதாகிருஷ்ணன் முதற் பிரதியை சம்பிரதாய பூர்வமாகப் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து விருந்தினர்களுக்கான பிரதிகள் வழங் கப்பட்டன. அத்துடன் நல்லைக் குமரன் மலருக்கான ஆக்கங்களை வழங்கிய அனை வருக்குமான சிறப்புப் பிரதிகளும் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்வியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.வை.விஜயபாஸ்கர் நல்லைக் குமரன் மலரின் வெளியீட்டுரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் விரிவுரையாளர் த.அஜந்தகுமார் மலரின் ஆய்வுரையையும் ஆற்றினர்.



குறித்த நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், வீணாகான குருபீடப் பீடாதிபதி சிவஸ்ரீ.சபா வாசுதேவக் குருக்கள், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர்களான பேராசிரியர் நா.சண்முகலிங்கன், வாழ் நாள் பேராசிரியர் பொ.பால சுந்தரம்பிள்ளை மற்றும் பேராசிரியை மனோன்மணி சண்முகதாஸ், யாழ்.மாநகரச் பையின் முன்னாள் ஆணை யாளர்களான இ.த ஜெயசீலன். வே.பொ.பாலசிங்கம், மூத்த ஆன்மிகவாதி கலாபூஷணம் இராசையா சிறிதரன், யாழ்.மாந கரசபை அதிகாரிகள், உத்தி யோகத்தர்கள், பல்துறை சார்ந்தவர்கள் மற்றும் ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஐ.வி.மகாசேனன்



8

# என் காலங்கள் வழியே...

## புதியதொரு இல்லம்!

டெல்லியின் ஆரம்ப நாட்களை கடினமாக்கிய தங்குமிட பிரச்சினை ஒருவாறு முடிவுக்கு வந்தது. ஒக்டோபர்-08அன்று சர்வதேச மாணவர்கள் இல்லத்தில் டெல்லியில் எனது நிரந்தர குடியேற்றத்திற்கு பிரவேசித்தேன். இயல்பாக இலக்கம் “3” மேல் எனக்கு விருப்பம் அதிகம். எனது பிறந்த திகதி “12” என்ற அடிப்படையில் எனது பிறந்த இலக்கம் “3” ஆக அமைவதால், அதுசார்ந்த ஈர்ப்பு இயல்பாக அதிகமாக காணப்படும். இலக்கம்-3 எனக்கு அதிஷ்டத்தை தந்ததோ என பரிசோதித்ததில்லை. விருப்பு சார்ந்து இலக்கம்-3இனை அதிஷ்ட இலக்கமாக மனம் தேறிக்கொள்வதும் இயல்பாகும். இந்த இயல்புகளை இங்கு குறிப்பிட காரணம், எனது அறை இலக்கம் “33”. ஆக எவ்வளவு இழுபறியானாலும் எனக்கு கிடைத்துள்ள புதிய அறை மிக அதிஷ்டமாக அமையுமென அறை இலக்கம் நம்பிக்கையை கொடுத்தது.

சர்வதேச மாணவர்கள் இல்லத்திற்கு போக முதலே, அது தொடர்பில் நண்பர்கள் விதந்துரைத்தமை அதிக எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியது. நான் செப்டெம்பர்-13 டெல்லி வந்த நாள் முதல் தமிழ்நாட்டு நண்பன் லோகேஸ், சர்வதேச மாணவர்கள் இல்லம் நிச்சயமாக சர்வதேச மாணவர்களுக்கு வழங்கப்படும் என அதிக நம்பிக்கையூட்டி, ஏனைய விடுதிகளை விட அதிகம் சொகுசானது என்றும் கூறி வந்தான். அவ்வாறே பல்கலைக்கழக



நண்பர்களும் சர்வதேச மாணவனுக்கு, சர்வதேச மாணவர்கள் இல்லம் நிச்சயம் கிடைக்குமே, உங்களுக்கு ஏன் கிடைக்கவில்லையென வியப்புடன் கேட்பார்கள். அத்தோடு அங்கு ஏனைய விடுதிகளை விட உணவு நல்லா இருக்குமென்ற நற்சான்றிதழ்களை வழங்குவார்கள். சர்வதேச மாணவர்கள் இல்லம் தொடர்பான நண்பர்களின் விதந்துரைப்புகளே அது தொடர்பில் அதிக எதிர்பார்ப்பை உருவாக்கியது. மீள மீள வெளிநாட்டு மாணவர் பதிவுகள் பீடாதிபதியிடம் விடுதி தொடர்பான கோரிக்கையுடன் செல்ல தூண்டியது. அதில் ஏற்பட்ட ஏமாற்றம், “சர்வதேச மாணவர்கள் இல்லம் சர்வதேச மாணவர்களுக்கு நிச்சயம் கிடைக்கும்” என சந்திக்கும் நண்பர்கள் கூறும் போது சினம் தான் ஏற்படும்.

எனவே எதிர்பார்ப்பும், ஏமாற்றமும் நிறைந்த விடுதி கிடைக்கப்பெற்ற போது, ஆரம்ப நாட்களில் அதன் குறை ஏதுமே புலப்படுவதில்லை. நிறைகள் மாத்திரமே பதிந்தன. அத்துடன் கடந்த ஒரு மாதங்களும் நிலையான இருப்பிடமின்றியும், உணவுடன் ஏற்பட்ட மோதல்களிலும் பெரிய விமோசனத்தை புதிய விடுதி வழங்குகையில் அதன் குறைகள் ஏதுமே மனதுக்கு உடன்படுவதாக அமையவில்லை. அது காலப்போக்கில் பழகுகையிலேயே வெளிப்படும். அதனை பழகும் போது பதிவு செய்கின்றேன். இந்த பதிவில் முழுமையாக புதிய விடுதி ஏற்படுத்திய இனிமையான அனுபவங்களையே பதிவு செய்யப்படுகின்றது.

ஆம். இலங்கையர்களாக இன, மத மற்றும் மொழி வேறுபாடற்ற ஒத்துழைப்பை முதல் நாளே பெற்றுக்கொண்டேன். நான் சில யதார்த்தங்களை ஏற்றுக்கொண்டே என் அரசறிவியில் பயணத்தையும் தொடர்பவன். எனது அரசறிவியலின் எழுத்துக்கள் சிங்கள பௌத்த பேரினவாத ஒடுக்குமுறைக்கெதிரான நீதிக் கோரிக்கையாகவே அமைகின்றது. சிங்கள பௌத்த பேரினவாதம் வெறுமனவே தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் மாத்திரம் எதிரானது அல்ல. முழு இலங்கைக்குமே ஆபத்தானதாகும். இலங்கையின் சமகால அரசியல் பொருளாதார ஸ்திரமற்ற சூழல் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் சங்கிலித் தொடர் விளைவிலானதேயாகும். எனவே சிங்கள சகோதரர்களதும் நண்பர்களதும் அன்பை ஏற்றுக்கொள்வதிலும், மீள கொடுப்பதிலும் தயக்கம் காட்டியதில்லை. எனினும் எனது சூழல் அதற்கான வாய்ப்பை உருவாக்கவில்லை. 29 வருடங்கள் பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வி என தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்திலேயே





வாழ்ந்தேன். இடையே உயர்தர கற்கைகளின் பின்னர் பல்கலைக்கழக நுழைவுக்கு முன்னர் ஓராண்டுகள் கொழும்பில் கணினி சான்றிதழ் கற்கையை தொடர்ந்தேன். எனினும் அங்கும் பெரிய அளவில் சிங்கள சகோதரர்களுடன் அல்லது நண்பர்களுடன் பழகும் வாய்ப்பு கிடைக்கவில்லை. பழக கிடைத்த நண்பர்களுடன் நட்பை பகிர்ந்துள்ளேன்.

அவ்வாறானதொரு அரிதான சகோதரர்கள் விடுதியில் கிடைத்தனர். ஏற்கனவே டெல்லி வருகையில் நல்ல சகோதரிகள் கிடைத்தார்கள். குறிப்பாக மதுசங்கா என்பவர் நல்ல சகோதரியாக நிலைபெற்றுள்ளார். அவ்வாறே விடுதியில் மதுவின் நல்ல சகோதரனாக மனதில் பதிவானான்.

விடுதியில், என் அறை ஒரு கட்டில், படிப்பதற்கு புத்தகம் வைக்க கூடிய தட்டு பொருத்தப்பட்ட மேசை மற்றும் சுவரோடு சேர்ந்த ஒரு அலுமாரி என்றவாறு காணப்பட்டது. அறைக்கு வந்த முதல் நாள் என் உடைகளோடும், குளிப்பதற்குரிய ஒரு வாளி மற்றும் அறையை சுத்தம் செய்யக்கூடிய துடப்பத்தோடு மாத்திரமே வந்திருந்தேன். வீட்டில் நிலத்தில் படுத்து புரளும் பழக்கத்தில், படுக்கை தொடர்பான எந்த எண்ணமும் இல்லை. நான் விடுதிக்கு வந்ததும், மதுவின் என் அறைக்கு வந்து என்னை வரவேற்றான். அத்துடன் தன்னுடைய நண்பர் ஒருவரின் அறையில் காணப்பட்ட மேலதிக மெத்தை ஒன்றை தற்காலிகமாக எடுத்து தந்தான். மேலும் எந்த உதவி என்றாலும் தயக்கமின்றி கேட்குமாறு உரிமையுடன் கூறினான். அவ்வாறே இன்னொரு சிங்கள சகோதரரும் ஏற்கனவே எங்கள் விடுதியில் தங்கியிருந்தார். சுபத் எனும் பௌத்த பிக்குவே ஆவார். ஆவர் டெல்லி பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டத்தை தொடர்கின்றார். எவ்வித செருக்குமின்றி இயல்பாக பழகக்கூடியவர். நாம் சகோதரர் என்ற அன்புரிமையில் பழகுவார். புழக்கலவை ஏதும் செய்யும் போது எனக்கு கொண்டு வந்து தருவார். ஏதும் பழங்கள் வாங்கினால் அல்லது வெளி நண்பர்கள் ஏதும் கொண்டு வந்து தந்தால் அதனை என்கூடவும் பகிர்ந்து கொள்வார். மதுவின் மற்றும் சுபத் ஆகிய இருவருக்குமிடையிலிருந்த அன்பு பகிர்வுக்கு சமனான அன்பையே என்னுடனும் இருவரும் பகிர்ந்து கொண்டார்கள். மொழி தான் நாங்கள் அதிகம் நெருங்குவதையும், அவர்களுக்கிடையில் அதிகம் நெருக்கம் உருவாகுவதிலும் வேறுபாட்டை காட்டியது.

மொழி இலங்கையின் இரு சமுகங்களையும் வேறுபடுத்துவத்துவது தொடர்பில், விழிப்புணர்வான பொறிமுறை



அவசியமாகின்றது. இரு சமுகங்களின் மொழிகளையும் பாதுகாப்பதுடன், இரு சமுகங்களும் சகோதர மொழிகளை சகஜமாக அறிந்து கொள்ளக்கூடிய ஆவண செய்தல் அவசியமாகின்றது. மக்கள் நாம் நேரடியாக தொடர்புறுகையிலேயே இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையும் தீர்வை பெற வழி ஏற்படுத்த முடியும். மாறாக இரு சமுகத்திற்கும் தரகராக காணப்படும் அரசியல்வாதிகள், தமது அரசியல் வியாபரத்திற்கான இரு சமுகங்களையும் கூறு போடுவதிலையே முனைப்பாக செயற்படுவார்கள். நான் சிங்களத்தையோ அல்லது என் சிங்கள சகோதரர்கள் தமிழையோ அறியாதது தொடர்பில், ஒரு இந்திய நண்பனுடனான உரையாடலில் வெட்கி தலைகுனிந்தோம். எங்கள் விடுதியில் வசிக்கும் அபிஜித் ரெட்டி எனும் ஒரு ஆந்திர நண்பன் என்னோடு தமிழில் உரையாடுவான். நானும் பௌத்த பிக்குவும் ஆங்கிலத்தில் உரையாடி கொண்டிருக்கையில், இடையில் நுழைந்த அபிஜித் ரெட்டி தன்னுடைய நண்பர்களுக்கு எங்களை அறிமுகப்படுத்துகையில், “இவர்கள் இலங்கையை சேர்ந்தவர்கள். எனினும் உரையாடுகையில் ஆங்கிலத்திலேயே உரையாடுவார்கள். எனினும் நான் மகாசேனனுடன் தமிழில் உரையாடுவேன்” எனக்கூறியிருந்தார்.

இது நாங்கள் இலங்கையர்கள் என்ற போதிலும், மொழியால் தமிழர்களாயும், சிங்களர்வர்களாயும் ஆழமாய் வேறுபட்டுள்ளோம் என்ற செய்தியையே வழங்கியது. இந்தியர்கள் பெரும்பாலும் பல மொழி பேசும் ஆளுமையாகவே உள்ளார்கள். அதுவே பரந்த இந்திய தேசத்தை ஒன்றாக வைத்துள்ளது. நாங்கள் சிறுதீவுக்குள் இரு மொழிகளையே கொண்டுள்ள போதிலும், ஒன்றாக வாழ முடியவில்லை என்பது சிறு சலனத்தை ஏற்படுத்தும் அனுபவமாகவே அமைகின்றது.

எம் தாய்மொழியை புறந்தள்ளி ஏனைய மொழிகளுக்கும் எம்மை அடகு வைப்பதே எம் தலைமுறையை அழிக்கக்கூடியதாகும். எனினும் மொழிகளை தொடர்பு ஊடகமாக கற்பது தவறாக அமையப்போவதுமில்லை. அது சமுகப்பிணைப்புக்கே வழிவகுக்கும். இதனை இலங்கையின் இரு சமுகங்களுமே புரிந்து கொள்வது அவசியமாகின்றது. இந்தியாவில் என் நாட்கள் இதனை அடிக்கடி அனுபவக் கற்கைகளாக வழங்குகின்றது. மாற்றத்தை பற்றி புதிய அணுகுமுறைக்குள் சிந்திப்போம்.

சர்வதேச விடுதியில், இந்தியாவில் இலங்கையர்களாக பெற்ற அனுபவத்தையே இப்பதிவு பகிர்கின்றது. எனினும் சர்வதேச விடுதி அமெரிக்க முதல் ஆபிரிக்கா வரை, ஆசியா முதல் ஐரோப்பா வரை என பல முகங்களை காண பழக வாய்ப்பாகியது.

*தொடர்ந்து பழகுவோம்....*

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

(யாழ்ப்பாணம் - இலங்கை)




## வருடாந்த மகோற்சவம் - 2024

### பிரதான உற்சவங்கள்

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மகோற்சவமானது 04.09.2024(புதன்) காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15.09.2024(ஞாயிறு) மாலை 6.00 மணிக்கு கொடியிறக்கத்துடன் நிறைவடையவுள்ளது.

| விஷேச தினங்கள் | திருவிழா | திகதி | கிழமை | நேரம் |
|---|---|---|---|---|
| கொடியேற்றத் திருவிழா | 1ம் திருவிழா | 04.09.2024 | புதன் | காலை 10.00 |
| திருமுறைத் திருவிழா | 3ம் திருவிழா | 06.09.2024 | வெள்ளி | மாலை 5.00 |
| முத்தேவியர் திருவிழா | 4ம் திருவிழா | 07.09.2024 | சனி | மாலை 5.00 |
| தங்கரதத் திருவிழா | 5ம் திருவிழா | 08.09.2024 | ஞாயிறு | மாலை 5.30 |
| திருமஞ்சத் திருவிழா | 6ம் திருவிழா | 09.09.2024 | திங்கள் | மாலை 5.00 |
| வேட்டைத் திருவிழா | 9ம் திருவிழா | 12.09.2024 | வியாழன் | மாலை 1.00 |
| கைலாயவாகனத் திருவிழா | 9ம் திருவிழா | 12.09.2024 | வியாழன் | மாலை 5.00 |
| பட்டுக்குடைத் திருவிழா | 10ம் திருவிழா | 13.09.2024 | வெள்ளி | காலை 11.00 |
| சப்பறத் திருவிழா | 10ம் திருவிழா | 13.09.2024 | வெள்ளி | மாலை 4.00 |
| தேர்த் திருவிழா | 11ம் திருவிழா | 14.09.2024 | சனி | காலை 9.00 |
| தீர்த்தத் திருவிழா | 12ம் திருவிழா | 15.09.2024 | ஞாயிறு | காலை 8.30 |
| கொடியிறக்கம் | 12ம் திருவிழா | 15.09.2024 | ஞாயிறு | மாலை 6.00 |
| பிராயச்சித்த அபிஷேகம் | | 16.09.2024 | திங்கள் | காலை 6.00 |
| வைரவர் பொங்கல் | | 16.09.2024 | திங்கள் | மாலை 3.00 |